பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 தை 24 புதன்கிழமை (06-02-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:73

## நாளை பூரண கடையடைப்பு!

யாழ்ப்பாணம்,பெப்.6

குடாநாட்டு கடற்றொழிலாளர்கள் மேற்கொண்டு வரும் நியாயபூர்வமான போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து பொதுஅமைப்புகளால் நாளை பூரண கடையடைப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு யாழ். வணிகர் கழகம் உட்பட பல அமைப்புகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

மருத்துவ நிலையங்கள், சிற்றுண்டி நிலையங்கள் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிறுவனங்கள், கடைகள் என்பன நாளை முற்றாக மூடப்படும் என்றும் -

பாடசாலைகள் மற்றும் பஸ் போக்குவரத்து உட்பட பொதுமக்களுக்கான ஏனைய சேவைகள் நாளை வழமைபோல் இடம்பெறும் என்றும - அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

யாழ்.குடாநாட்டு மீனவர்கள் மேற்கொண்டுவருகின்ற மறியற் போராட்டம் நேற்று ஆறாவது நாளாகத் தொடர்ந்து நடைபெற்றது.

நேற்றுக்காலையும் யாழ். செயலகம், யாழ்.பிரதேசசெயலகம் ஆகியவற்றின் முன்பாக மறியற் போராட்டத்தில் மீனவர்கள் ஈடுபட்டனர்.

கடையடைப்புக்கு பின்னரும் மீனவர்களின் போராட்டத்துக்கு சாதகமான பதில் கிடைக்காவிட்டால் குடாநாட்டில் உள்ள படையினரின் முக்கியமான முகாம்கள் மற்றும் பொலீஸ் நிலையங்களின் முன்பாகவும் மறியற் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு மீனவர்கள் தள்ளப்படலாம் என்று மீனவர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-6-9-10-15)

### அமைச்சர் ஜயலத் வருகை தரும்போது

## செயலகம் முன் அடுத்தவாரம் பாதுகாவலர் சங்கம் மறியல்

யாழ்ப்பாணம்,பெப்.6

1996 - 97 காலப்பகுதியில் குடாநாட்டில் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பான பூரண விவரங்கள் உடனடியாகத் தெரியப்படுத்தப்பட வேண்டும். இல்லையேல் எதிர்வரும் 13ஆம் திகதி அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா இங்கு வரும்போது அவரை செயலகத்துக்குள் செல்லவிடாது தடுத்து மறியற்போர் புரிவோம். கைது செய்யப்பட்டுக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் இவ்வாறு அறிவித்திருக்கிறது.

இது தொடர்பாக அமைச்சர்கள் ஜயலத் ஜெயவர்த்னா, தி.மகேஸ்வரன் ஆகியோருக்கு பாதுகாவலர் சங்கம் நேற்றுக் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளது.

காணாமற்போன 275 பேரில் 167

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தலை ஒத்திவைப்பதற்குப் பதிலாக மாற்றுத் திட்டத்தை அரசு முன்வைத்தது!

## திட்டமிட்டபடி நியமனப் பத்திரங்கள் ஏற்பு பின்னர் அவற்றை ரத்துச்செய்யவும் ஏற்பாடு

கொழும்பு,பெப்ரவரி6

**வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்திவைக்கும்படி தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு விடுத்துள்ள கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு சட்ட அதிகாரம் அற்ற நிலையில் இருக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு -**

**அதற்கான மாற்று ஏற்பாடு ஒன்றைச் செய்வதாக தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புக்கு உறுதியளித்திருக்கிறது.**

இந்த ஏற்பாட்டின்படி -

திட்டமிட்டபடி இத்தேர்தல்களுக்கான நியமனப் பத்திரங்களை ஏற்கும் பணி நாளைமறுதினம்வரை இடம்பெற்றுப் பூர்த்தியாகும். அதன்பின்னர் தேர்தல் நடக்கும் தினத்தை ஒத்தி வைப்பதான அறிவிப்பு விடுக்கப்படும். அத்தினத்துக்கு முன்னர், ஏற்கனவே விடுக்கப்பட்ட தேர்தல் பிரகடன அறிவிப்பையும், அதன் கீழ் ஏற்கப்பட்ட நியமனப் பத்திரங்களையும் செல்லுபடியற்றதாக்கும் புதிய சட்டம் ஒன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய உள்ளூராட்சி தேர்தல் சட்டங்களின்படி -

- தேர்தல் பிரகடனம் வெளியிடப்பட்டு, நியமனப் பத்திரம் ஏற்கும்பணி ஆரம்பித்துவிட்டால் அதனை இடைநிறுத்தவோ, ஒத்திவைக்கவோ அல்லது தள்ளிப்போடவோ சட்டத்தில் ஏற்பாடுகள் ஏதுமில்லை. என்றாலும் தேர்தல் தினத்தை மட்டும் ஏதேனும் காரணம் கருதி தள்ளிப்போடலாம். ஆனால் புதிய நாள் ஒன்றில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட நியமனப் பத்திரங்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைப்பு:

## அரசின் மாற்றுத் திட்டம் புலிகள் தரப்புக்கு தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.6

உள்ளூராட்சித் தேர்தலை வடக்கு - கிழக்கில் ஒத்திவைப்பதற்குப் பதிலாக அரசாங்கம் முன்வைத்திருக்கும் மாற்றுத் திட்டம் குறித்து நோர்வே ஊடாக விடுதலைப் புலிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பாக தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் தலைவர்களுடன் நேற்று நடத்திய பேச்சுக்களின் போது அரசு மாற்றுத் திட்டம் ஒன்றை முன்வைத்தது.

இத் திட்டம் தொடர்பான விவரங்களை பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அமைச்சர் மிலிந்த மொரகொட கொழும்பில் உள்ள நோர்வே தூதர் ஜோன் வெஸ்பேர்க் ஊடாக நோர்வேத் தூதுக் குழுவுக்கு அறிவித்துள்ளார்.

நோர்வேத் தூதுக்குழு லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்த சமயம் இந்தத் தகவலை அவரிடம் தெரியப்படுத்தியதாக அறியவந்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சி தலைவர் இன்று உரை

கொழும்பு,பெப்.6

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ புதிய எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய எதிர்க்கட்சித் தலைவரின் முதலாவது நாடாளுமன்ற உரை இன்று இடம்பெறவுள்ளது. (ஐ-6)

## இந்தியாவுக்குத் தப்ப முயன்ற ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் கைது!

யாழ்ப்பாணம்,பெப்.6

இந்தியாவுக்குப் படகு மூலம் தப்ப முயன்ற ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் மூவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட இவர்கள் மூவரையும் பொலீஸார் நேற்று யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன் ஆஜர் செய்தனர்.

தமது அமைப்பைச் சேர்ந்த ஏனைய உறுப்பினர்கள் தம்மைக் கொடுமைப்படுத்தியதாகவும் -

இதன் காரணமாக இந்தியாவுக்குத் தப்பிச்செல்லத் தாம் முயன்றதாகவும் -

கைதான மூவரும் தெரிவித்ததாகப் பொலீஸார் நீதிவானிடம் கூறினர்.

இலங்கைக் கடல் எல்லைக்குள் மூவரும் கைது செய்யப்பட்டிருப்பதால் அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகப் பொலீஸார் நீதிவானிடம் சுட்டிக் காட்டினர்.

மூவரும் தம்மைத் தங்கள் பெற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியத் தூதருக்கு விளக்கம்

கொழும்பு,பெப்.6

நோர்வே மேற்கொண்டுள்ள சமாதான முயற்சியின் தற்போதைய நிலை குறித்து இந்தியத் தூதர் கோபால கிருஷ்ண காந்திக்கு நோர்வேத் தூதர் ஜோன் வெஸ்பேர்க் விளக்கமளித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மற்றும் அரசுத் தரப்பினர் ஆகியோருடன் நடத்திவரும் பேச்சுக்கள் தொடர்பான விவரங்களையும் சமாதான முயற்சியில் ஏற்பட்டுள்ள முன்னேற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மறியற்போரைக் கைவிட கோருகின்றார் ஜயலத்!

கொழும்பு,பெப்.6

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல தரப்பட்ட பிரச்சினைகளுக்கும் தீர்வு காண அரசு படிப்படியாக முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றது. கடற்றொழிலாளர்களின் தற்போதைய மறியற்போராட்டம் அந்தமுயற்சிகளை சீர்குலைத்துவிடும்.

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நீண்ட பலவருடகாலமாக வடக்கு - கிழக்கு மக்கள் அனுபவித்துவரும் துன்பதுயரங்களுக்குத் தீர்வு காண்பதற்காக விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அந்தப் பேச்சுக்களுக்கு முன்னர் பொருளாதாரத் தடைகளை நீக்கியுள்ளோம். தரைவழிப்பாதையைத் திறக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். படிப்படியாக மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுக்க விருக்கின்றோம்.

மீன்பிடித் தடைநீக்கம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடி வருகின்றோம்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### குடாநாட்டு மீனவருக்கு

## பிரதமரின் செய்தியுடன் அரசகுழு யாழ். வரும்

தொடர்ச்சியான மறியற்போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கடற்றொழிலாளர்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் செய்தியை எடுத்துக் கொண்டு குழு ஒன்று அடுத்தசில தினங்களில் கொழும்பில் இருந்து இங்கு வரவுள்ளது.

மீனவர்களின் போராட்டம் தொடர்பாக தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் பிரமுகர்கள் நேற்று பிரதமரைச் சந்தித்த சமயம் இந்தத் தகவல் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

மீன்பிடித் தடையை நீக்குவதால் எதிர்நோக்கும் நடைமுறைச் சிக்கல்கள் குறித்துப் படைஅதிகாரிகள் தெரிவித்துள்ள விடயங்கள் இன்னமும் பரிசீலனை செய்யப்படவில்லை. நடைமுறைச் சிக்கல்கள் குறித்துப் பரிசீலனை செய்து இணக்க நிலை ஏற்படும்வரை மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க முயற்சி எடுத்துள்ளோம்.

- நிவாரணம் வழங்க அரசிடம் நிதிவளம் இல்லாததால் வெளிநாட்டு அமைப்புக்களிடம் நிதிபெற அமைச்சர் மிலிந்த மொரகொட பேச்சுக்கள் நடத்தியுள்ளார் என்று பிரதமர் கூட்டமைப்பு பிரதிநிதிகளிடம் தெரிவித்தார். (ஐ-3)

## போர்நிறுத்த உடன்படிக்கை: இறுதி நகல் வடிவம் தயார்!

கொழும்பு,பெப்.6

நிரந்தர யுத்தநிறுத்தம் தொடர்பாக இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் கைச்சாத்திடவிருக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் இறுதி வடிவம் குறித்து லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் நோர்வே தூதுக்குழுவினர் நேற்று விரிவாக ஆராய்ந்தனர்.

இது குறித்து அரசுத் தரப்புடன் கலந்துரையாடுவதற்காக தூதுக்குழுவினர் நாளை வியாழக்கிழமை கொழும்பு வரவுள்ளதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

லண்டனில் நேற்று இடம்பெற்ற பேச்சுக்களின் போது புரிந்துணர்வு உடன்படிக்கையின் இறுதி நகல் வடிவம் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது என்றும் -

அதில் மேற்கொள்ளப்பட வேண்டிய சில திருத்தங்கள் தொடர்பான விவரங்களைப் பாலசிங்கம் நோர்வேக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# தொழில் உரிமைக்காக போராடும் மீனவர்கள் சமூகத்துக்கு ஆதரவு

## கத்தோலிக்க குருக்கள் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.6

நிவாரணத்தில் தங்கள் வயிற்றை நிரப்ப விரும்பாமல் தொழில் உரிமையைப் பெற பட்டினிகிடக்க தயாராகிவிட்ட மீனவர்களின் போராட்டத்துக்கு எங்கள் ஒத்துழைப்பையும் தோழமையையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

யாழ்மறை மாவட்ட கத்தோலிக்க குருக்கள் ஒன்றியம் விடுத்த ஓர் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தொழில் மனிதனை நிறைவு படுத்துகின்றது. மனித மாண்பை உயர்த்துகிறது. தொழில் வழி மனிதன் தனது ஆளுமையை இவ்வுலகில் பதிக்கிறான். தொழில் புரிவதும் அதன் வழி தன்னையும் தன்னோடு சார்ந்தவர் வாழ்வையும் வளமாக்குவது ஒவ்வொரு தொழிலாளியின் அடிப்படை உரிமை.

இக்குடாநாட்டில் நிலைகொண்டுள்ள அரச இராணுவத்தின் பாதுகாப்புக்கருதி 12 ஆண்டுகளுக்கு மேலாக கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாகத் தம்தொழிலை மேற்கொள்ள அனுமதிக்கப்படவில்லை. இராணுவத்தின் பாதுகாப்பு ஒன்றிற்காக இங்கு வாழ்கின்ற மக்களின் பாதுகாப்பு, தொழில், வாழ வியல் உரிமைகள் அனைத்தும் தாரை வார்த்துக் கொடுக்கப்பட வேண்டியுள்ளது. அதன்விளைவு பரிதாபம்! இதனால் அதிமோசமாக பாதிக்கப்படுபவர்கள் மீனவர்கள். கடல்வலய கட்டுப்பாட்டு ஒழுங்கு மீனவர்கள் வாழ்வு இயக்கத்தை வேரோட்டமாக அழிக்கிறது. வாழ்விட உரிமைகளைப் பறிக்கிறது. மனித மாண்பினை சிதைக்கிறது. திக்கம் தொடக்கம் தொண்டமனாறு ஈறாக கடந்த ஆறு மாதகாலமாக மீன்பிடிக்க முற்றுமுழுதாக தடை செய்யப்பட்டுள்ளது. ஒருசில இடங்களில் சில மணித்தியாலங்கள் மட்டும் தொழில் செய்யவும் அதுவும் இராணுவத்தின் கருணை இரக்கத்திற்கும் மண்டியிட வேண்டியநிலை! இதனால் வாழ்வின் விரக்தியின் விளிம்பிற்கும் தள்ளப்பட்டு தற்கொலை செய்ய முற்படும் மீனவர்கள்!

தமது நிரந்தர விடிவுக்கு கடற்றொழிலாளர்கள் கிளர்தெழுந்து தம் உரிமைகள் - மாண்பிற்காக - போராடத் துணிந்து விட்டார்கள். விடிவுகிட்டும் வரை தொடர்ச்சியான போராட்டத்தில் குதித்துவிட்டார்கள். கொட்டு மழையில் தங்கள் உரிமைக் குரலை ஒலிக்கச் செய்கிறார்கள். நிவாரணத்தில் தங்கள் வயிற்றை நிரப்ப விரும்பாமல் தொழில் உரிமையைப் பெற பட்டினி கிடக்கத் தயாராகிவிட்டார்கள்.

இவர்களது நீதியான போராட்டத்திற்கு யாழ்.மறை மாவட்ட கத்தோலிக்க குருக்கள் ஒன்றியம் ஒத்துழைப்பையும் உரிமைப் போராட்டத்திற்கு தோழமையையும் மீனவர்களின் அன்றாட வாழ்வியல் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்விற்கு இறையாசீரையும் வேண்டிநிற்கின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வெள்ளம் நிறைந்த குழிக்குள் வீழ்ந்த குழந்தை மரணம்

யாழ்ப்பாணம்,பெப்.6

மலசலகூடம் கட்டுவதற்காக வெட்டப்பட்டிருந்த குழிக்குள் தேங்கிநின்ற மழை வெள்ளத்துக்குள் தவறி வீழ்ந்த 15மாத குழந்தை ஒன்று பரிதாபகரமாக உயிரிழந்தது.

ஆனைக்கோட்டை மூளாய் லேனைச் சேர்ந்த இராஜேஸ்வரன் ஜெயகாந்தன் என்ற குழந்தையே மழை வெள்ளத்தில் மூழ்கி உயிரிழந்தது. (ஐ-6-9-15)


நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இந்த வார 'சுடர் ஒளி' வாரமலர் (பெப் -03) இன்று கிடைக்கும்!
பிரதியைப் பெற முந்துங்கள்!!



(சி20592)



### இன்றறக்ட் கழகத்தினருடனான அவசர கலந்துரையாடல்

நாளை வியாழக்கிழமை நடைபெறும் யாழ். றோட்டறிக் கழகத்தின் வாராந்தக் கூட்டத்தில் இன்றறக்ட் கழக உறுப்பினரை மையமாகக் கொண்ட கலந்துரையாடல் நடைபெற இருக்கின்றது. யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பொறுப்பாளர் டாக்டர் இ.சிவசங்கரும் வைத்திய மாணவர்களும் இணைந்து முக்கிய பொதுச்சேவைத் திட்டமொன்றினை அறிமுகப்படுத்த இருக்கின்றார்கள்.

இந்நிகழ்வின் முக்கியத்துவத்தையிட்டு சகல இன்றறக்ட் கழகத்திலிருந்தும் இரண்டு முக்கிய உறுப்பினர்களைத் தவறாது பங்குபற்றித் தாம் பெற்ற அறிவை சக கழகத்தினருடனும் பகிர்ந்து கொள்ளும்படி வேண்டப்படுகின்றார்கள்.

நாள்: 07.02.2002 (வியாழக்கிழமை)
நேரம்: மாலை 3.00 மணி.
இடம்: 12.சிவகுருநாதர் வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்.றோட்டறிக் கழகம்.

(C/20620)

★ குறிப்பு: வழமையான கூட்ட நேரத்தையிட்ட மாற்றத்தினைத் தயவு கூர்ந்து கவனிக்கவும்.



அர்ஜன் துணை

[illegible]




செல்வன் அர்னன்

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த பொன்னுச்சாமி யாதவன் கிராம்புவில் சாவகச்சேரி வடக்கு கணபதிப்பிள்ளை தீபா தம்பதியினரின் செல்வப் புதல்வன்

### செல்வன் யாதவன் அர்னன்

இன்று (06.02.2002) புதன்கிழமை தனது முதலாவது பிறந்ததினத்தை சுவிஸால் வந்து "பஞ்சக் கடை", உரும்பிராய் கிழக்கில் உள்ள இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை சுவிஸில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, சாவகச்சேரியில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா மற்றும் காண்டீபன் மாமா, கோபன் மாமா, செந்தூரான் மாமா (லண்டன்), இந்திரன் பெரியப்பா குடும்பம் (நோர்வே), முருகன் பெரியப்பா குடும்பம் (டென்மார்க்), இந்துமதி மாமி குடும்பம் (கனடா), சுமதி மாமி குடும்பம் (நோர்வே) மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அம்பாள், முருகன் அருட்கடாட்சம் பெற்றுப் பல்லாண்டுகாலம் நீடூழி வாழவேண்டுமென வாழ்த்துகிறார்கள்.

"கிராம்புவில்"
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.

தகவல்:
வீ.சி.கணபதிப்பிள்ளை
(அம்மப்பா).

(97550)



### கண்ணீர் அஞ்சலி

யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
திரு.சி.சிவராசாவின்
அன்புத் தாயார்

திருமதி அன்னமுத்து சின்னையா

அவர்கள் காலமான செய்தி கேட்டு துயரடைவதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/கரவெட்டி ஸ்ரீநாரதா வித்தியாலயம்.
யா/அம்பன் அ.மி.த.க. பாடசாலை.
யா/உடுத்துறை மகா வித்தியாலயம்.

(C/20618)



### கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் மனேஜர்
திரு.நடராசா சிவபரன்

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நிறைஞ்சனாஸ் தியேட்டர்,
சங்கானை.
(சி20617)

நிறைஞ்சனாஸ்
உரிமையாளரும், ஊழியர்களும்.



### அனுதாபச் செய்தி

எமது கல்லூரியின் மூத்த பழைய மாணவரும்
அணுசக்தித்துறை விஞ்ஞானியுமான

பேராசிரியர் க.கந்தையா

(முன்னாள் ஆய்வாளர், பணிப்பாளர்
கார்வெல் அணுசக்தி நிறுவனம், ஐக்கிய அமெரிக்கா)

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு கல்லூரிச் சமூகம் குடும்பத்தவருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

யா/உடுப்பிட்டி அமெரிக்கன்
மிசன் கல்லூரி,
உடுப்பிட்டி.

அதிபர், ஆசிரியர்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(367)



### 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 10 - 03 - 1926



உதிர்வு: 11 - 02 - 1999

திருமதி சற்குணம் கந்தவனம்

திகதி: 06.02.2002

அன்பின் உருவமாய்
குழு பிள்ளைகளைப் பெற்றெடுத்த எங்கள் அம்மாவே!
நீயே ஊர்நாயை வீட்டுக்கு வரவணைத்து
உணவு வைத்து உன் உயிரையே கொண்டு விட்டான்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

நிரந்தர முகவரி:
விஜி களஞ்சியம்,
த. ஜனா,
பளை நகரம்.

தற்காலிக முகவரி:
இராஜ வீதி,
பாற்பண்ணை.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(372)



### பூப்புனித மங்கள நன்னீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்,

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான விஷு வருடம் தை மாதம் 24 ஆம்நாள் இன்று (06-02-2002) புதன்கிழமை அஷ்வினி நட்சத்திரமும் தசமி திதியும் அமிர்தசித்த யோகமும் கூடிய சுபநன்னாளில் முற்பகல் 8 மணி 55 நிமிடம் முதல் 9 மணி 05 நிமிடம் வரையுள்ள கும்ப லக்கின சுபநன் முகூர்த்த வேளையில்

எமது த்விதீய புத்திரியாகிய

சௌபாக்கியவதி நவநீதாவுக்கு

ருதுசோபன (பூப்புனித) நன்னீராட்டு விழா நிகழ்வுகள் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அந்நிகழ்வுகளில் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகைதந்து பங்குபற்றி செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் :
பிரம்மஸ்ரீ
சி.சிவநாவுக்கரசு சர்மா (மூர்த்தில் குருக்கள்)
ஸ்ரீமதி மேனகாதேவி தம்பதிகள்,
சி.கிருஷ்ணசர்மா,
சி.வினோதாம்பாள்.

பொன்னாலை வீதி,
கட்டுடைச் சந்தி, கட்டுடை,
மானிப்பாய்.

(365)

# மேற்கு ஆப்கானிஸ்தானில் கடும் பஞ்சம்! உணவுக்காக சிறுமிகளை விற்கும் அவலம்!!

காபூல்,பெப்.6

மேற்கு ஆப்கானிஸ்தானில் ஆயிரக்கணக்கானவர்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளனர். தற்போது நிலவும் கடுங்குளிராலும் பாதிக்கப்பட்டுள்ள அவர்கள் சர்வதேச உதவி நிறுவனங்களாலும் கவனிக்கப்படாத பரிதாபநிலையில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆப்கானிஸ்தானில் சுமார் 70 லட்சம் மக்கள் நிவாரண உதவிகளை நம்பி உயிர் வாழ்கிறார்கள். ஆனால் போர்கள் காரணமாக உதவிப் பொருள்களை விநியோகிக்கும் பாதைகள் சீர்குலைந்திருப்பதால் உதவிகள் பின்தங்கிய பகுதிகளைச் சென்றடைய முடியாதிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் மேற்கு ஆப்கான் பிரதேசம் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பட்டினியால் வாடும் மக்களை எலும்புருக்கி நோய் பீடித்து வருகிறது. மருத்துவ வசதி இன்மையால் தகுந்த சிகிச்சை பெறமுடியாது அவர்கள் உள்ளனர். மலைப்பிரதேசமான மேற்கு ஆப்கானின் பட்கீஸ் பகுதியே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள சியாசங் கிராமத்தில் பெரும்பாலான வீடுகள் வெறுமையாகவே உள்ளன. அந்த வீடுகளில் வாழ்ந்தவர்களில் சிலர் மலைகளைத் தாண்டி ஹேரத் நகரில் உள்ள அகதி முகாம்களை சென்றடைந்துவிட்டனர். மற்றவர்கள் பட்டினியாலும் நோய்களாலும் உயிரிழந்துள்ளனர்.

மலைகளைத் தாண்டிச் செல்ல பயன்படும் பாதைகள் சேறும் சகதியுமாக உள்ளதால் நிவாரண உதவிகளைக் கொண்டு செல்லமுடியாதிருப்பதாக உதவி அமைப்புகள் இலகுவாகக் கூறிவிடுகின்றன.



இவர்கள் பெற்றோரால் உணவுக்காக விற்கப்பட்ட 11 மற்றும் 13 வயதுகளுடைய இரு சிறுமிகள்

இந்த நிலையில் சிறிதளவு உணவுப் பொருள்களுக்காக தமது மகள்மாரை பண்டமாற்றாகக் கொடுத்துவிடும் அவலமும் நிகழ்கிறது. குழந்தைகள் முதல் யுவதிகள் வரை தானியத்துக்கு பண்டமாற்றாக விற்கப்படுகிறார்கள். வெகுஅபூர்வமாக தொண்டு நிறுவனங்கள் உதவிப் பொருள்களை சிரமப்பட்டுக்கொண்டு சென்று மக்களுக்குக் கொடுத்தாலும் ஏற்கனவே அவர்கள் பட்ட கடனுக்காக உதவிப் பொருள்களை, கடைக்காரர்கள் பறித்துச் சென்றுவிடுகின்றனர். கடைக்காரர்களுக்கு முன்னர் பட்ட கடனைத் திருப்பிச் செலுத்தினாலேயே அப்போதைய பசியைத் தீர்க்க அவர்களுக்கு ஏதாவது கிடைக்கக்கூடும். (ஒ)

# தீவிரவாதிகளின் தாக்குதலில் 16 நேபாளப் பொலீஸார் பலி!

காத்மண்டு,பெப்.6

நேபாளத்தில் மாவோயிஸத் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 16 பொலீஸார் கொல்லப்பட்டனர். கடந்த நவம்பர் மாதம் அங்கு அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் இடம்பெற்ற முதலாவது பாரிய தாக்குதல் இதுவாகும்.

நாட்டின் வடக்குப் பகுதி மாகாணமான கவ்ரெபலன்ஞ் சொக்கில் உள்ள பொலீஸ் நிலையொன்றை நேற்றுமுன்தினம் இரவு தீவிர வாதிகள் தாக்கினர். அப்போது இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில் 16பொலீஸார் உயிரிழந்தனர். தீவிரவாதிகள் தரப்பில் 6பேர் இறந்திருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது.

அவசரகால நிலையை நீடிப்பது குறித்து நேபாள நாடாளுமன்றம் அடுத்தவாரம் விவாதிக்க உள்ள நிலையில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

கம்யூனிஸ அரசொன்றை ஸ்தாபிப்பதற்காகப் போராடிவரும் மாவோயிஸத் தீவிரவாதிகள் கடந்த ஆண்டின் இறுதியில் பொலீஸ் நிலைகள் மீது பெரும் எடுப்பில் தாக்குதல்களை நடத்தியதையடுத்து நேபாளத்தில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. (ஒ)

## காஷ்மீர் முதல்வரின் கோரிக்கை

ஸ்ரீநகர்,பெப்.6

ஆயுதங்களை கைவிட்டு, காஷ்மீர் மாநிலத் தேர்தல்களில் போட்டியிட, தீவிரவாத இயக்கங்களின் கூட்டமைப்பான 'குரியத்' மாநாடு கட்சி முன்வர வேண்டும் என்று அம்மாநில முதல்வர் பரூக் அப்துல்லா கேட்டுள்ளார். (ஒ)

# பிரபல செய்தியாளர் சிம்பாப்வேயில் கைது!

ஹராரே,பெப்.6

பிரிட்டிஷ் பத்திரிகையாளர் ஒருவரை பாதுகாப்புச் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் கீழ் சிம்பாப்வே அரசு கைதுசெய்துள்ளது.



பசில்டன் பெடா

'த இன்டிப்பென்டன்ற்' என்ற பிரிட்டிஷ் பத்திரிகையின் சிம்பாப்வே செய்தியாளரான பசில்டன் பெடா என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார். இவர் சிம்பாப்வே பத்திரிகையாளர் சங்கத்தின் செயலாளர் நாயமாகவும் பதவி வகித்துவந்தார்.

கடந்த வியாழக்கிழமை சிம்பாப்வே அரசு பிறப்பித்த தேசியப் பாதுகாப்புச் சட்டம் மனித உரிமை அமைப்புகள் மற்றும் வெளிநாடுகள் ஆகியவற்றின் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியிருந்தது.

இந்த நிலையில் அந்தச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு சில தினங்களில் சர்வதேச ஊடகம் ஒன்றின் செய்தியாளர் அதன் கீழ் கைதாகியிருப்பது சர்ச்சையை உருவாக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஹராரே நகர நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்ட பெடா, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

சிம்பாப்வேயில் அடுத்தமாதம் இடம்பெறவுள்ள அதிபர் தேர்தலில் மீண்டும் வெற்றிபெறுவதற்கு அதிபர் றோபேர்ட் முகாபே கையாளும் அடக்குமுறையே புதிய சட்டங்கள் என்று எதிர்க்கட்சிகள் விமர்சிப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## அமெரிக்க அதிகாரி பாகிஸ்தான் விஜயம்

வாஷிங்ரன்,பெப்.6

பாகிஸ்தானில் கடத்தப்பட்ட அமெரிக்கப் பத்திரிகையாளரை விடுவிப்பது தொடர்பாக அதிபர் முஷாரபுடன் ஆலோசனை நடத்த அமெரிக்க நிதி அமைச்சக உயர் அதிகாரி ஒருவர் பாகிஸ்தான் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ)

# பெண்கள் மீது அஸிட் வீச்சு; பங்களாதேஷில் அதிகரிப்பு

## தடுக்க அரசு புதிய சட்டம்

டாக்கா,பெப்.6

பங்களாதேஷில் திருமணம் குறித்த கருத்து வேறுபாடுகள் காரணமாக இளம்பெண்கள் 'அஸிட்' வீச்சுக்கு இலக்காவது அதிகரித்து வருகிறது. இதனைத் தடுப்பதற்காக கடுமையான சட்டங்களை பங்களாதேஷ் அரசு பிறப்பித்துள்ளது.

புதிய சட்டங்களின்படி 'அஸிட்' வீச்சு வழக்குகளில் குற்றவாளியாகக் காணப்படுபவருக்கு மரணதண்டனை விதிக்கமுடியும்.

'அஸிட்' வீச்சால் பாதிக்கப்பட்டோர் அமைப்பு வெளியிட்ட விபரங்களின்படி கடந்த ஆண்டில் அதற்கு முந்தைய ஆண்டைவிட 'அஸிட்' வீச்சுக்கள் 50சதவீதம் அதிகரித்துள்ளது. இந்த வருடத்தின் தொடக்கத்தில் அது மேலும் அதிகரித்து வருகிறது.

பெற்றோர் பேசி முடிக்கும் திருமணங்களை நிராகரிக்கும் இளம் பெண்களே பெரும்பாலும் 'அஸிட்' வீச்சுக்கு இலக்காவதாகவும் -

குழந்தைகளும், ஆண்களும் கூட 'அஸிட்' வீச்சால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் -

கூறப்படுகிறது.

'அஸிட்' வீச்சால் பெருமளவில் முகம் பாதிக்கப்பட்டு விகாரமாகியவர்களை அவர்களது குடும்பத்தார் மற்றும் சமூகம் புறக்கணிக்கும் நிலையில் அவர்களுக்கு புனர்வாழ்வளிக்க வேண்டிய கட்டாயத்தை பங்களாதேஷ் அரசு எதிர்நோக்குவது குறிப்பிடத்தக்கது. (ஒ)



பலஸ்தீனர் மீது தாக்குதல் நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இஸ்ரேலிய டாங்கியை வழிமறிக்கும் இஸ்ரேலியர்களைப் படத்தில் காணலாம்.

# பயங்கரவாத எதிர்ப்புப் போரில் அமெரிக்கா தனித்துச் செயற்படும்

## புஷ்ஷின் ஆலோசகர் தெரிவிப்பு

வாஷிங்ரன்,பெப்.6

பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையில் தனித்துச் செயற்பட அமெரிக்கா தயாராகிவருவதாக அதிபர் புஷ்ஷின் பாதுகாப்பு ஆலோசகர் ரிச்சர்ட் பேர்ல் தெரிவித்தார்.

நட்பு நாடுகளை பயங்கரவாத நடவடிக்கைகளில் இருந்து காப்பாற்றுவதைவிட தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்வதற்கு அமெரிக்கா முதலிடம் கொடுப்பதாகவும் அவர் வலியுறுத்தினார்.

ஜேர்மனியின் மியூனிச் நகரில் இடம்பெற்ற சர்வதேசப் பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையில் தற்போது பிரிட்டன் உட்பட நேச நாடுகளுடன் இணைந்தே செயற்பட்டுவருகிறது. அமெரிக்கா மீதான விமானத் தற்கொலைத் தாக்குதலின் பின்னர் மேலை நாடுகள் பலவற்றுக்கும் பயங்கரவாத அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இதனைப் பயன்படுத்தியே அந்த நாடுகளை ஆப்கான் மீதான தாக்குதலில் தன்னுடன் இணைந்து செயற்பட அமெரிக்கா செய்ததாகவும் -

ஆனால் ஆப்கான் கைதிகள் விவகாரம் உட்படப் பல விடயங்களில் அந்த நாடுகள் அமெரிக்கா மீது கொண்டுள்ள அதிருப்தியை சமாளித்து, தொடர்ந்து தனது செல்வாக்கை நிலைநாட்டவே பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் தனித்துச் செயற்படப்போவதாக அமெரிக்கா எச்சரித்திருப்பதாகவும் -

ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

# ஆப்கான் உள்ளூர் மோதல்களை நிறுத்தக் கண்காணிப்பாளர்கள்!

## இடைக்காலத் தலைவர் நடவடிக்கை

காபூல்,பெப்.6

ஆப்கானில் உள்ளூர் தலைவர்களிடையே ஏற்பட்டுள்ள மோதல்களைத் தீர்த்து வைப்பதற்காக இடைக்காலத் தலைவர் ஹமிட் ஹர்சே கண்காணிப்பாளர்களை புதிதாக நியமனம் செய்திருக்கின்றார்.

கிழக்கு மாகாணமான ஹாட்ஸ்ஸில் இடைக்கால அரசால் ஆளுநராக நியமிக்கப்பட்ட பஷா கானின் ஆதரவாளர்களுக்கும் உள்ளூர் ஆயுதக்குழுவின் சபில் உல்லாவுக்கும் இடையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் சமர் இடம்பெற்றது தெரிந்ததே.

இது குறித்துப் பேசுவதற்கும், அங்கு அமைதியை நிலைநாட்டுவதற்கு மாகவே ஹர்சே மூன்று பேர் அடங்கிய கண்காணிப்பாளர் குழுவை நியமித்துள்ளார்.

இந்தக் குழு மேற்படி விடயம் குறித்து முழுமையான விசாரணைகளை நடத்தி, அது குறித்த அறிக்கையை ஹமிட் ஹர்சேயிடம் ஒப்படைக்கும். அதன் அடிப்படையில் அவர் நடவடிக்கைகளை மேற்கொள்வார். (ம)

## பின்லேடன் பாகிஸ்தானில்?

வாஷிங்ரன்,பெப்.6

அமெரிக்காவால் தேடப்பட்டு வரும் ஒஸாமா பின்லேடன் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள காஷ்மீர் பகுதியில் ஒளிந்துகொண்டுள்ளதாக அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ. கருதுவதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

காபூலில் வைத்து செய்தியாளரிடம் பேசிய சி.ஐ.ஏ அதிகாரி ஒருவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். ஆப்கானில் அமெரிக்கர்களின் தாக்குதலுக்கு அஞ்சி தப்பி வெளியேறியுள்ள ஒஸாமா, பாகிஸ்தானைத் தவிர, வேறு எங்கும் சென்றிருக்க முடியாது என்றும் கூறியுள்ளார். (ம)

# ஈரான், ஈராக், வடகொரியா மீதான கடும் போக்கை தவிர்க்கிறார் புஷ்

லண்டன்,பெப்.6

ஈரான், ஈராக் மற்றும் வடகொரியா ஆகிய நாடுகள் தீமையின் அச்சாக உள்ளன என்ற தனது குற்றச்சாட்டின் கடுமையைக் குறைக்கும் முயற்சியில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் இறங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஈரான் மற்றும் வடகொரியா ஆகிய நாடுகள் அமைதியை நிலைநாட்ட உறுதியோடு செயற்பட்டால், அந்த நாடுகளுடன் பேச்சுநடத்த அமெரிக்கா விரும்புவதாக அதிபர் புஷ் இப்போது கூறுகிறார்.

சில நாள்களுக்கு முன்னர் அமெரிக்க நாடாளுமன்ற அவைகளின் கூட்டுக்கூட்டத்தில் பேசிய அதிபர் புஷ், பயங்கரவாதத்துக்கு எதிரான அமெரிக்கப் போரின் அடுத்த இலக்குகள் ஈரான், ஈராக், வடகொரியா ஆகிய நாடுகள் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

புஷ்ஷின் உரைக்கு ஈரான், ஈராக், வடகொரியா ஆகிய நாடுகள் கடுமையான வார்த்தைகளில் பதிலடி கொடுத்திருந்தன.

இந்த நிலையிலேயே அதிபர் புஷ் மேற்படி 3 நாடுகளின் மீதான குற்றச்சாட்டுக்களில் கடுமையைக் குறைக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளார்.



பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் பிரிட்டன் உட்பட வேறு சில நாடுகளும் அமெரிக்காவுடன் இணைந்து ஈடுபட்டுள்ளன. அவற்றின் தலைவர்களுடன் கலந்தாலோசிக்காது அமெரிக்க அதிபர் தன்னிச்சையாகப் பயங்கரவாதத்துக்கு எதிரான போரின் அடுத்த இலக்குக் குறித்து கருத்து வெளியிட்டமை கூட்டு நாடுகளை விசனப்படுத்தியிருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

அத்துடன் தனது கருத்துமூலம் ஈரான், ஈராக், வடகொரியாவை தேவையின்றி புஷ் கோபப்படுத்தியிருப்பது, அந்த நாடுகளின் தலைவர்களுக்கு ஆதரவைப் பெருக்கிவிடும் என்றும் கருதப்படுகின்றது.

இதனாலேயே அதிபர் புஷ் கடுமையைக் குறைக்கும் கருத்துக்களை வெளியிடத் தொடங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ)

## சாவகச்சேரிச் சந்தை விரைவில் மீசாலையில்!

தென்மராட்சி,பெப்.6

சாவகச்சேரி பொதுச் சந்தை விரைவில் மீசாலையில் இயங்கவுள்ளது. இதற்கான காணியை பெற்றுக்கொள்வதில் நகர சபையினர் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

மீசாலை புதிய புகையிரத நிலையத்திற்கு முன்பாக உள்ள ஆலயக் காணியொன்றில் சந்தையை நடத்துவதற்காக ஆலய நிர்வாகத்தினருடன தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

மீசாலை, அல்லாரை, கச்சாய், மட்டுவில் ஆகிய பகுதிகளில் விவசாயத்தினை மேற்கொண்டு வருவோரும், இப்பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்களும் விடுத்த வேண்டுகோளையடுத்து சாவகச்சேரி பொதுச்சந்தை மீசாலையில் இயங்கப்படவுள்ளதாகத் தெரியவந்தது. (ம-117)

## வவுனியா கல்விக் கல்லூரிக்கு இங்கிருந்து தெரிவானோர் விவரம்

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு யாழ்.மாவட்டத்தில் இருந்து 42 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான வகுப்புகள் எதிர்வரும் 11ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர், விவரங்கள் வருமாறு:-

**ஆரம்பக் கல்வி**

எஸ்.கஸ்தூரி (வவுனியா), என்.சிவதர்சினி (கே.கே.எஸ்.வீதி), ரி.மாலதி (சுழிபுரம்), எல்.கே.கமலலோஜினி (சுன்னாகம்), எஸ்.தேவகி (பருத்தித்துறை), வி.மைவிழி (கொழும்பு), ரி.சங்கீதா (யாழ்ப்பாணம்), ஜி.சியாமளா (கோப்பாய்), சி.அனுசியா (கொடிகாமம்), வி.புவிவதனி (மீசாலை).

ரி.கெலன் அமுதா (சுன்னாகம்), என்.சத்தியரஞ்சனி (புலோலி கிழக்கு), எம்.ஏ.லோவன்சு (பண்டத்தரிப்பு), பி.கே.ஜெயமலர் (சுன்னாகம்), கே.சுந்தரமோகன் (கொட்டாவத்தை), வி.ரேணுகா (உடுப்பிட்டி), வி.கோகுலராணி (புத்தூர் மேற்கு).

**விவசாயம்**

பி.வாசுகி (நுணாவில் மத்தி), எஸ்.சிவரஞ்சனி (குப்பிளான் வடக்கு), எஸ்.நந்தகுமார் (மிருசுவில்), எஸ்.சாமினி (மட்டுவில் தெற்கு).

**உடற்கல்வி**

ரி.தவச்செல்வம் (உடுப்பிட்டி), எஸ்.சுகிந்தன் (சுன்னாகம்), எஸ்.சிவரஞ்சிதமலர் (கொடிகாமம்).

**இந்துசமயம்**

ஜி.பிரபா (ஏழாலை தெற்கு), என்.பாரதி (காரைநகர்), பி.உஸா (அளவெட்டி மத்தி), பி.சந்திரமோகன் (கெற்பலி தெற்கு), கே.மைதிலி (வரணி), என்.கவிதா (நல்லூர்), எஸ்.சுகிரதன் (அளவெட்டி தெற்கு), ஜி.தமிழினி (சுன்னாகம்), ஜி.கலைவாணி (அராலி தெற்கு), ரி.சிறிகுமாரி (உரும்பிராய் கிழக்கு), எம்.பார்த்தீபன் (கொடிகாமம்).

**கிறிஸ்தவம்**

ஈ.சுதர்சினி (நாவாந்துறை), எஸ்.துஷ்யந்தினி (பண்டத்தரிப்பு).

**மனையியல்**

எஸ்.சிவதர்சினி (ஏழாலை தெற்கு), என்.பபிலா (பூந்தோட்டம்), ஆர்.ரஞ்சினிதேவி (வைரவப்புளியங்குளம்), கே.ரஜாகரி (அச்செழு), எஸ்.சிவசாந்தினி (ஏழாலை தெற்கு). (ம)

## வலிகாமம் மேற்குப் பிரதேச சபை, சுழிபுரம்
## முக்கிய அறிவித்தல்

**1. வலிகாமம் மேற்கு எல்லைக்குட்பட்ட சுழிபுரம், சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி ஆகிய உப அலுவலக எல்லைக்குட்பட்ட வதிவிட வாடிக்கையாளர்களுக்கும் வரியிறுப்பாளர்களுக்கும் பின்வரும் விடயங்களைக் கவனத்திற்கொள்வதற்கு இத்தால் அறியத்தருவது:-**

**1987ஆம் ஆண்டில் 15ஆம் இலக்கப் பிரதேச சபைகள் சட்டத்திற்கமைய குறித்த எல்லைக்குள் சபையின் அனுமதியின்றி நிரந்தரம் அல்லது தற்காலிகக் கட்டடங்கள், மலசலகூடங்கள், மதிற்சுவர்கள், கிணறுகள் போன்றவற்றைப் புதிதாக அமைப்பதும் அல்லது திருத்தவேலைகள் செய்வதும் சட்டப்படி குற்றமாகும். எனவே, ஏற்கனவே உள்ள நடைமுறைச்சட்டத்திற்கமைய குறித்த வேலைகளைச் செய்பவர் எவராயினும், எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் நீதிமன்றத்தின் மூலம் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர் என்பதை அறியத்தருகின்றேன்.**

02. 2002ஆம் ஆண்டுக்கான உரிமம்

(அ) மேற்படி வலிகாமம் மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட உரிமம் பெற்று வியாபாரம் மற்றும் தொழில் செய்வோர் எதிர்வரும் 31.03.2002ஆம் திகதிக்குமுன் தங்கள் உப அலுவலகங்களில் விண்ணப்பத்தைப் பெற்று அவற்றைப் பூர்த்திசெய்து உரிம வரியைச்செலுத்தி உரிமத்தைப் புதுப்பித்துக்கொள்ளவோ அல்லது புதிதாகப் பெற்றுக்கொள்ளவோ வேண்டப்படுகிறீர்கள். தவறும் பட்சத்தில் தங்கள்மீது உரிம அனுமதி பெறாமல் தொழில் அல்லது வியாபாரம் செய்வோர்மீது நீதிமன்றத்தின்மூலம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

(ஆ) 2002ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி மற்றும் ஒற்றை, இரட்டை மாட்டுவண்டிகள் ஆகியவற்றுக்கான உரிமங்களை 31.03.2002ஆம் திகதிக்கு முன்பு பெற்றுக்கொள்வதன்மூலம் தங்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

03. சந்தை வரி செலுத்துவோர் கவனத்துக்கு

வலி.மேற்கு, சுழிபுரம் எல்லைக்குட்பட்ட எம்மால் அங்கீகாரம் பெற்ற குத்தகையாளர்கள் பின்வரும் தரவுகளுக்கு அமைய வரி அறவிடவேண்டும் எனச் சபையால் தீர்மானிக்கப்பட்ட விவரத்தை அறியத் தருகின்றேன்.

(அ) மரக்கறிச் சந்தை.

மொத்தமாக விற்கப்படும் மரக்கறிகளுக்கு விற்கப்படும் மொத்தத் தொகை ரூபா 1000/=இற்கு வேண்டிய வரி வீதம் - 3%.
ரூபா 1000இற்கு மேற்பட்ட ஒவ்வொரு 1000/= இற்கும் - 2%.

(ஆ) மரவள்ளி, கருணை போன்ற கிழங்கு வகைக்கு ஒவ்வொரு 10 கிலோவுக்கும் கழிவு - 01கிலோ.
கழிவுடன் சேர்க்க வேண்டியவை: போற பைக்கு 01 கிலோ கழிவு.
சாக்குப் பைக்கு 3 கிலோ கழிவு.

(இ) வாழைக்குலைக்கு

முதல் 10 கிலோவுக்கு - 2 கிலோ
10 கிலோவுக்கு மேல் - 3 கிலோ
குறிப்பு: குலை மட்டத்தில் இருந்து தண்டு 3 கிலோவுக்கு மேற்படக் கூடாது.

(ஈ) இடவரி அறவீடு

மண்டபத்திற்குள் இருக்கும் வியாபாரிக்கு 1 1/2 மீற்றர் அகலத்திற்கு நாளொன்றுக்கு ரூபா 15/=, மண்டபத்திற்கு வெளியே இருக்கும் வியாபாரிக்கு நாளொன்றிற்கு ரூபா 10/= 1 1/2 மீற்றர் அகலத்துக்கு.

04. துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு

துவிச்சக்கரவண்டி அனைத்தும் பாதுகாப்பு நிலையத்தில் நிறுத்தப்படல் வேண்டும். அதற்கான ஒழுங்குகளை குத்தகைக்காரர் செய்தல் வேண்டும்.
(I) துவிச்சக்கரவண்டி ஒன்றுக்கு 1/=
(II) பூட்டு இல்லாத துவிச்சக்கரவண்டி ஒன்றுக்கு 2/=
(III) மோட்டார் சைக்கிளுக்கு 2/=

**வே.மகேந்திரன்**
உப தலைவர்,
வலி.மேற்குப் பிரதேச சபை, சுழிபுரம்.

*வலிகாமம் மேற்குப் பிரதேச சபை,*
*சுழிபுரம்.* (C/20611)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
திரு.சி.சிவராசா
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி அன்னமுத்து சின்னையா**

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம். (C/20613) — வலயக் கல்விப் பணிப்பாளரும், அலுவலர்களும்.

## சடலங்களின் எச்சங்களை புதைக்கப் பணிப்பு

தும்பளை, வடலிப்பாதி என்ற இடத்தில் எரிந்த நிலையில் மீட்கப்பட்ட இரு சடலங்களில் எச்சங்களை பருத்தித்துறை சோரியடி மயானத்தில் அடையாளமிட்டுப் புதைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் திங்களன்று உத்தரவிட்டார்.

மீட்கப்பட்ட எச்சங்கள் மந்திகை மருத்துவமனைச் சவச்சாலையில் வைக்கப்பட்டு பிரேத பரிசோதனையை பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி எஸ்.கதிரவேற்பிள்ளை மேற்கொண்டார். (ம-109)

## சுடுநீர் கொட்டி குழந்தை படுகாயம்!

குசினிக்குள் தவழ்ந்து சென்ற 8 மாதக் குழந்தை அங்கே தேநீர் தயாரிப்பதற்காக ஊற்றி வைக்கப்பட்டிருந்த சுடுநீர் கிண்ணத்தை இழுத்த போது அது சரிந்து உடம்பில் சுடுதண்ணீர் பட்டுப் படுகாயமடைந்த சம்பவம் துன்னாலை மேற்கு தக்குச்சம்பாதி என்னும் இடத்தில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கனகலிங்கம் கார்த்தீபன் என்னும் குழந்தையே மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகும். (ம-117)

## வடமராட்சியில் பச்சிலைப்பள்ளி கூ.ச. பிரதிநிதி

வடமராட்சிப் பிரதேசத்தில் தங்கியுள்ள பளைப்பகுதி மக்களின் நலன் கருதி சங்க நிர்வாக நடைமுறைகளை செயற்படுத்துவதற்கு பச்சிலைப்பள்ளப ப.நோ.கூ.சங்கப் பிரதிநிதியொருவர் பிரதி வியாழக்கிழமை தோறும் நெல்லியடிக் கிளைக்கடைக்கு வருகைதரவுள்ளார்.

இப்பிரதேசத்தில் தங்கியுள்ள பளைப் பகுதி மக்கள் தமது பிரச்சினைகளை இப்பிரதிநிதியிடம் தெரிவித்து நிவர்த்தி செய்துகொள்ளுமாறு சங்கப் பொதுமுகாமையாளர் கோரியுள்ளார்.

சங்கத்தின் தலைமை அலுவலகம் கோண்டாவிலில் அமைந்துள்ளதால், வடமராட்சியில் தங்கியுள்ள மக்களின் நலன்கருதியே சங்க நிர்வாகத்தினால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

## யாழ்.பல்கலை உடற்கல்வித்துறை மாணவர்களுக்கு!

யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வித்துறையின் முதலாம் மற்றும் இரண்டாம் வருட மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு உடற்கல்வி விரிவுரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் அனைவரையும் இந்தக் கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு மாணவர் மன்றத் தலைவர் கேட்டுள்ளார். (ஒ)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

HAPPY BIRTHDAY



**06.02.2002**
இணுவில் வட்டுவினியைச் சேர்ந்த
*காந்தகுமார் – கலையரசி* தம்பதிகளின்
**செல்வப் புதல்வன் கதிசன்**

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (06.02.2002) லண்டனில் உள்ள தனது இல்லத்தில் விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை இணுவில் வட்டுவினியைச் சேர்ந்த அப்பப்பா, பெரியப்பா, பெரியம்மா, அண்ணா, கனடாவில் உள்ள பெரியப்பா, பெரியம்மா, அண்ணாமார், வவுனியாவில் உள்ள மாமா, மாமி, மச்சான், மச்சான்மார், இணுவில் கிழக்கைச் சேர்ந்த அம்மப்பா, அம்மம்மா, மாமாமார் மற்றும் செட்டித்தெருவில் வசிக்கும் சுப்பிரமணியம் குடும்பத்தினர், கொழும்பில் உள்ள இராசேந்திரம் குடும்பம், இணுவில் வட்டுவினியைச் சேர்ந்த பேரன்மார், முத்திலிங்கம், செல்வம் ஆகியோர் கதிசனை அன்னை சிவகாமி அம்மன், வட்டுவினி அம்மன், வட்டுவினி வைரவர், வட்டுவினி பிள்ளையார் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*'பொன்னப்பாபதி,'*
*இணுவில் மேற்கு, இணுவில்.* (C/20614)
பொ.காசிப்பிள்ளை (அப்பப்பா)

## ருது சோபன விழா வாழ்த்து

ஸ்வஸ்திஸ்ரீ மங்களகரமான விஷு வருடம் தைமாதம் 24ஆம் நாள் இன்று (06.02.2002) புதன்கிழமை ருது சோபன விழாவைச் சிறப்பாகக் கொண்டாடும் கட்டுடையைச் சேர்ந்த **சிவமூர்த்திக்குருக்கள் - மேனகாதேவி** தம்பதிகளின
**சிரேஷ்ட புத்திரி**
**செல்வி நவநீதா**
அவர்கள் பல்கலையும் பெற்று சீரும் சிறப்புடனும் நீடூழி வாழ எமது நல்வாழ்த்துக்கள்.

*அன்புள்ளங்களான:*
மாமா - பிரபாகரசர்மா
மாமி - உமாராணி
மச்சான்மார் - கமலினி, மாலினி, தனுஷிஜா

*கண்ணகி அம்மன் கோயிலடி,*
*வட்டுமேற்கு,*
*வட்டுக்கோட்டை.* (359)

## தாதியர், பயிலுநர் தாதியர் தேவை (பெண்)

**நாளை (07-02-2002) வியாழக்கிழமை**
**பிற்பகல் 2 மணிக்கு நேரில்வரவும்.**
**யாழ்.வைத்திய நிலையம்,**
***(வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக)***
***யாழ்ப்பாணம்.*** (358)

## கேள்வி அறிவித்தல்

**வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்**

02-02-2002ஆம் திகதி உதயன் பத்திரிகையில் வெளிவந்த விளம்பரம் தொடர்பாக, .

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றக் கட்டடம் அமைத்தல் (கட்டம் 5) வேலைக்கான கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி எதிர்வரும் 14.02.2002ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 10.30 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

கேள்விப்படிவங்கள் 12.02.2002ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை வழங்கப்படும்.

14.02.2002ஆம் திகதி வியாழக்கிழமை 12.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.

சு.சந்திரசேகரம்,
(உப தலைவர்)
**தலைவருக்காக,**
**நகராட்சிமன்றம்,**
**வல்வெட்டித்துறை.**

*நகராட்சிமன்ற அலுவலகம்,*
*வல்வெட்டித்துறை,*
*05-02-2002* (C/20612)

## கண்ணீர் அஞ்சலி

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்
திரு.சி.சிவராஜா அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி அன்னமுத்து சின்னையா** அவர்கள்
காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நல்லுறவு மன்றம்,
**யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை,**
**மானிப்பாய்.**
(360)

உதயன்

## வேண்டாம் குத்துவெட்டு!

உள்ளூராட்சிச் சபைகளுக்கான வேட்பாளர்களைத் தெரிவுசெய்து, நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்வது தொடர்பாக நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புக்குள் பெரும் குத்துவெட்டு - பூகம்பம் - வெடித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

எந்த நோக்கத்துக்காகக் கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கத்தை மறந்து -

எந்த இலக்கு அடையப்பட வேண்டும் என்பதற்காகக் கடந்த தேர்தலில் தமிழ் மக்கள் வாக்குகளை அள்ளி வழங்கினார்களோ அவர்களின் எதிர்பார்ப்புகளைச் சிதறடிக்கும் வகையில் -

கூட்டமைப்புத் தலைவர்கள் தமக்குள் பிடுங்குப்படுவது தமிழ்த் தலைமைகளின் 'ஒற்றுமை' கண்டு 'சந்தி சிரிக்கும்' நிலையை உருவாக்கியிருக்கிறது.

நாடு முழுவதும் நடைபெற இருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான நியமனப்பத்திரம் தாக்கல் செய்வது நாளைமறுதினம் வெள்ளிக்கிழமையுடன் முடிவடைய உள்ளது. இந்தத் தேர்தலை வடக்கு - கிழக்கில் ஒத்திவைக்குமாறு தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் சார்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொள்கை அளவிலேயே ஏற்றுக்கொண்டிருந்தார். ஆனால் தேர்தல் நடைபெறாது என்பதை உத்தியோகபூர்வமாக அறிவிக்கமுடியாத நிலையில் அவர் இருந்தார் - இருக்கிறார்.

தேர்தல் நடக்குமா இல்லையா என்பது பெரும்பாலும் நேற்றுத் தெரிய வருமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நேற்று இப்பத்தியை எழுதும்வரை எந்த முடிவும் அறிவிக்கப்படவில்லை.

ஏற்கனவே பிரகடனப்படுத்தப்பட்டுவிட்ட ஒரு தேர்தலை - தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவராமல் - ஒத்திவைக்கமுடியாது. எட்டாம் திகதி நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்யும் கால அவகாசம் முடிவடைவதற்கு முன்னர் தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பான சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் அவசர சட்டமூலமாகச் சமர்ப்பித்து நிறைவேற்றுவதாயின் அதற்கு ஜனாதிபதியின் ஒப்புதல் அவசியம். நியமனப்பத்திரம் தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் முடிவடைந்த பின்னர் அத்தகைய சட்டமூலத்தை நிறைவேற்றினாலும் தேர்தலை ஒத்திவைக்கலாம். ஆனால் மீண்டும் தேர்தலை நடத்தும்போது முன்னர் தாக்கல் செய்த நியமனப்பத்திரப் பட்டியற்படிதான் தேர்தலை நடத்தவேண்டி இருக்கும்.

இந்நிலையில் -

வடக்கு - கிழக்கில் மட்டும் தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பான சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் அவசர சட்டமூலமாக நிறைவேற்ற ஜனாதிபதி ஒப்புதல் வழங்குவாரா?

இந்தச் சந்தேகமே - ஐயுறவே - வடக்கு - கிழக்கில் தேர்தல் ஒத்திவைக்கப்படும் என்பதைக் கூட்டமைப்பினருக்குத் திட்டவட்டமாகக் கூறமுடியாத இக்கட்டு நிலையைப் பிரதமருக்கு ஏற்படுத்தியது.

பொதுத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினர் சோர்ந்துபோயுள்ளனர். இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு அடித்தளம் இடும் முயற்சிகளில் பிரதமர் ரணில் கணிசமான முன்னேற்றம் கண்டிருக்கிறார். இந்தப் பின்னணியில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டால் மக்கள் அலை ஐக்கிய தேசிய முன்னணியின் பக்கமே பலமாக வீசும். அது இந்தத் தேர்தலிலும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினருக்குப் பாதகமான முடிவுகளையே தரும். எனவே நாடுமுழுவதும் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்ற கோரிக்கை எதிர்க்கட்சித் தரப்பில் கிளம்பியுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உள்ளூராட்சித் தேர்தலை நாடு முழுவதும் ஒத்திவைக்க ஜனாதிபதி விரும்பக்கூடும்.

இந்நிலையில் வடக்கு - கிழக்கில் மட்டும் தேர்தலை ஒத்திவைக்கும் அவசர சட்டமூலத்துக்கு ஜனாதிபதியின் ஒப்புதலை எப்படி நாடுவது?

இது பிரதமர் ரணில் எதிர்நோக்கும் இக்கட்டு நிலை.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி எதிர்க்கட்சியைச் சேர்ந்தவராகவும், நாடாளுமன்ற அதிகாரத்தைக் கொண்ட பிரதமர் ஆளுங்கட்சித் தலைவராகவும் இருக்கின்ற நிலைமை ஸ்ரீலங்காவில் ஏற்பட்ட பின்னர், அதன் விளைவாய் ஆளுங்கட்சித் தரப்பு எதிர்கொள்கின்ற - எதிர்கொள்ளப்போகின்ற - நெருக்கடிகளுக்கு இதனை ஒரு முன்னுதாரணமாகக்கொள்ளலாம்.

ஆட்சியதிகாரத்தில் உள்ள பலவீனங்கள், அரசமைப்பு ரீதியான சட்டங்கள் இவ்வாறு உள்ள பின்னணியில் அதற்கேற்ப தங்கள் அரசியல் வியூகங்களை வகுத்து - தமிழ் மக்களுக்காக பேரம் பேசும் - நிலையை உருவாக்க முயற்சிக்காமல் - கூட்டமைப்பினர் தங்களுக்குள் பிடுங்குப்படுவது நல்லதல்ல. அது தமிழ் மக்களுக்கு எந்தவகையிலும் விமோசனம் தராது.

# உருளைக்கிழங்கு அறுவடையில் அவசரம் காட்டும் விவசாயிகள்!

சுன்னாகம்,பெப்.6

ஏழாலை, புன்னாலைக் கட்டுவன், ஊரெழு, ஈவினைப் பகுதிகளில் உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபட்டுவரும் சில விவசாயிகள் உரிய பருவம் வரமுன்னரே உருளைக் கிழங்கை அறுவடை செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உருளைக்கிழங்குக்குத் தற்போது நல்ல விலை கிடைப்பதால், இலாப மீட்டும் நோக்கில் விவசாயிகள் இவ்விதம் அறுவடையில் அவசரம் காட்டி வருகின்றனர்.

இதனால் கிழங்கில் மாத்தன்மை அற்று இருப்பதுடன், சுவையும் குறைவாக இருப்பதாகப் பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சந்தைகளில் தற்போது 120ரூபாவுக்கும் கூடிய விலையில் உருளைக கிழங்கு விற்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

(க-27)

## பெரும்போக நெற்செய்கைக்கு
# தெற்கில் இருந்து விதைநெல் எடுத்து வரவேண்டிய நிலை!

வலி.தென்மேற்கு,பெப்.6

இவ்வருட பெரும்போக நெற்செய்கைக்கு விதைநெல் தெற்கில் இருந்தே தருவிக்கப்படவேண்டும் என்று விவசாய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்ட நெற்செய்கை பெருமளவில் வெள்ளத்தில் மூழ்கி அழிந்துள்ளமையே இதற்குக்காரணமாகும்.

இதனால் கொழும்பில் இருந்து, இவ்வருட பெரும்போக நெற்செய்கைக்கு விதைநெல் தருவிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

(க-185)

## நாட்டு நடப்பு

### தென்மராட்சி - அன்றும் இன்றும்

இன்று II

கலைதவழ் கோபுரம் சூழ்
கவின்பெற திகழ்ந்த மண்ணில்
மலையென பழங்கள் ஒன்றாய்
மண்மிசை குவிந்த மண்ணில்
நிலைகுலைந்து அலறும் மக்கள்
நீங்காத துயரில் மூழ்க
தலைமகன் தனை இழந்து
தவித்திட தாய்மார் எல்லாம்
அலையலையாக வந்து வீழ்ந்து
அழித்திட பல்குழல்கள் ஒன்றாய்
கலங்கியே கண்ணீர் மல்க
கடந்து சென்றனர் தாயாம்நாட்டை.

- *விகடகவி.*

## பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன பேட்டி:
# அரசியல் தலையீடுகள் காரணமாகவே இராணுவத்தினர் வழிதவற நேரிடுகிறது
## சமாதான முயற்சி வெற்றிபெறும் என நம்புகிறேன்

கொழும்பு,பெப்.6

இலங்கை இராணுவம் ஒழுக்கமானது. அதன் அதிகாரிகளும் சிப்பாய்களும் சட்டத்தை மதித்தே நடக்கின்றனர். ஆனால் அரசியற் தலையீடுகளால் அவர்கள் வழிதவறிவிட நேரிடுகிறது.

- இவ்வாறு தெரிவித்தார் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன.

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

உடதலவின்ன படுகொலைகள் உட்பட கண்டியில் இடம்பெற்ற சில குற்றச் சம்பவங்கள், தமது கொடிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அரசியல்வாதிகள் படையினரைப் பயன்படுத்த முயல்வதை எடுத்துக்காட்டுகின்றன. அவ்வாறான அரசியல் வாதிகளை இனங்காண்பதில் இராணுவத்தினர் கூடிய கவனஞ் செலுத்தவேண்டும். அது நாட்டுக்கு நன்மை விளைவிக்கும்.

பொலீஸ் துறையிலேயே ஆகக் கூடிய அளவில் அரசியல் தலையீடு உள்ளது. ஒரு சட்டத்தரணி என்ற வகையில் கடந்த ஏழு வருடங்களில் பொலீஸார் பற்றிய பல முறைப்பாடுகளைப் பொதுமக்களிடமிருந்து பெற்றுள்ளேன். பொலீஸார் அதிகளவு பக்கச்சார்புடையவர்களாக உள்ளனர். நாடாளுமன்றத்தில் இது தொடர்பாகப் பல தடவைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு அமைச்சர் மாரப்பன தெரிவித்துள்ளார்.

அவரிடம் மேலும் கேட்கப்பட்ட சில கேள்விகளும் அவற்றுக்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:-

*கேள்வி:* பாதுகாப்பு அமைச்சர் பதவியை ஏற்றிருப்பது பற்றி எப்படி உணருகிறீர்கள்?

*பதில்:* பிரிவினை கோரி நடத்தப்படும் யுத்தம் தொடர்பாக நன்மையான நடவடிக்கைகளை மேற்கொள்ள எம்மால் முடியுமென்று நினைக்கின்றேன்.

*கேள்வி:* அவற்றில் சிலவற்றைக் குறிப்பிட முடியுமா?

*பதில்:* தீவிரவாத இயக்கங்களைத் தடை செய்வதே முன்னர் இராணுவத் தந்திரமாக இருந்தது. கடந்த சில ஆண்டுகளை மட்டும் வைத்து இதனைக் கூறவில்லை. தொடக்கம் முதலே இவ்வாறு இருந்ததாலேயே தற்போதைய மோசமான நிலைமை உருவானது. அமைதிக்கான பணியில் மட்டும் ஈடுபடுவதே எமது இராணுவ உபாயமாகும்.

அடுத்தது - இராணுவ அதிகாரிகள்கூட ஒப்புக்கொண்ட விடயம் - தேவையில்லாது அதிக பணத்தைச் செலவுசெய்து, நவீன ஆயுதங்கள வாங்கிக் குவிக்கப்படுகின்றன. இது தேவையற்ற ஒன்றாகும்.

*கேள்வி:* நீங்கள் குறிப்பிட்ட இராணுவ உபாயங்கள் எப்படித் தோல்வியடைந்தன. அதிலிருந்து மீள நீங்கள் என்ன செய்யப்போகின்றீர்கள்?

*பதில்:* முதலாவதாக விடுதலைப் புலிகளுடன் தற்போது போர் நடத்தும் தேவை இருப்பதாக நான் நினைக்கவில்லை. சமாதான நடவடிக்கையே இன்று எமது குறிக்கோள்; பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில் தாக்குதல் நடத்துவது எனது திட்டமல்ல. ஆனால் எமது தரப்பைப் பாதுகாக்க நாம் தயாராக உள்ளோம். இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களையும் அவற்றில் உள்ள நிலைகளையும் பாதுகாப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. கடந்தகால நடவடிக்கைகள் பலவும் தோல்வியில் முடிவடைந்ததற்கு மனப்பூர்வமாகத் திட்டமிடாததே காரணம்.

*கேள்வி:* சமாதான நடவடிக்கை குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

*பதில்:* நாம் இதில் வெற்றியடைவோம் என்று உறுதியாக நம்புகிறேன். யார் எதனைச் சொன்னாலும் விடுதலைப் புலிகள் அமைதி முயற்சியில் தீவிரமாக உள்ளதாகவே நான நம்புகிறேன். சமாதான நடவடிக்கைகளை நாம் ஓர் உயரிய தரத்துடனேயே அணுகுகிறோம். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதானம் குறித்து நிலையான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார். அதனால் நேற்றொரு பேச்சு, இன்றொரு பேச்சு என்று அவர் பேசுவதில்லை.

*கேள்வி:* சமாதான முயற்சிகள் நடக்கும் காலகட்டத்தில் இராணுவம் எப்படிப்பட்ட பயிற்சிகளில் ஈடுபடும்?

*பதில்:* இராணுவத்தினர் சாதாரண பயிற்சிகளில் - அவர்கள் மந்த நிலை அடையாமல் தடுக்கும் பயிற்சிகளில் - ஈடுபடுவார்கள்.

*கேள்வி:* விடுதலைப் புலிகள் ஆள்களையும், ஆயுதங்களையும் திரட்டுவதாகக் கூறப்படுவது பற்றி?

*பதில்:* பெரியளவில் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக எமது புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கவில்லை. இராணுவத்தினரைப் போலவே அவர்களும் தமது போராளிகளுக்குப் பயிற்சி அளிக்கவேண்டிய கட்டாயம் உண்டு. அதனையே அவர்கள் தொடரக் கூடும். நாம் இராணுவத்தினரை தற்போதைய அளவிலேயே வைத்திருக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகள்போன்று தம்மிடையே உள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காகப் புலிகள் ஆள்சேர்ப்பில் ஈடுபடக் கூடும். (க-ஒ)

## மீண்டும் பகல் நேர மின்வெட்டு

யாழ்ப்பாணம்,பெப்.6

யாழ். குடாநாட்டில் பகல் நேர மினவெட்டு நேற்று செவ்வாய்க்கிழமை முதல் நடைமுறைப்படுத்தப்படுவதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

காலநிலை சீரின்மையால் கப்பல் போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள தடங்கல் காரணமாக மின்சார சபைக்குப் போதியளவு எரிபொருள் எடுத்துவர முடியாதிருப்பதாலேயே பகல் நேர மின்வெட்டை அமுல்படுத்த வேண்யிருப்பதாக மின்சார சபை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(ஒ-8)

## நாளை

தை 25
வியாழக்கிழமை
(07-02-2002)
திதி : தசமி
முற்பகல் 10.14 வரை.
நட்சத்திரம் : கேட்டை
முன்னிரவு 8.29 வரை.
சுபநேரம் : 8.05 - 9.35
ராகுகாலம் : 2.05 - 3.35
(பழைய நேரப்படி)

## கொக்குவிலில் திருடர் கைவரிசை

யாழ்ப்பாணம்,பெப்.6

கொக்குவிலில் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் சைக்கிளில சென்றுகொண்டிருந்த நகைக்கடை உரிமையாளர் ஒருவரை மண்வெட்டிப்பிடியால் தலையில் தாக்கிவிட்டு அவர் பையில்வைத்திருந்த 15 ஆயிரம் ரூபா பணம், வங்கிப் புத்தகம், கடைத்திறப்பு மற்றும் அடையாள அட்டை ஆகியவற்றை திருடர்கள் அபகரித்துச்சென்றனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற சிறிது நேரம் கழித்து அதே இடத்தில் வைத்து மற்றுமோர் இளைஞனை வழிமறித்த இரு திருடர்கள் அவர் தாக்க முற்படவே, அவரைக் கத்தியால் வெட்டிக் காயப்படுத்திவிட்டுத் தப்பியோடினர். (ஒ-6)

## உதயவாக்கு

ஒரு மனிதனின் கெட்ட குணங்களை வெறுத்துவிடு; ஆனால் அம்மனிதனை வெறுக்காதே.




யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் சமூகம் புத்தாண்டு தொடக்கச் சமூகப் பணியாக முச்சக்கரவண்டி வழங்கும் நிகழ்வை நடத்தியது.

சமூகத் தலைவி செல்வி எஸ்.காயத்திரி, துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, கலைப் பீடாதிபதி பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர், சமூகவியல் சமூகப் பெருந்தலைவர் கலாநிதி என்.சண்முகலிங்கன், பெரும் பொருளாளர் ஏ.ஈ.ரிச்சேட் ஆகியோருடன் வண்டியைப் பெற்றுக்கொண்ட தென்மராட்சியைச் சேர்ந்த திருமதி தம்பையா செல்லம்மாவையும் படத்திற் காணலாம்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

### SPOKEN ENGLISH

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில, தபால்மூலம் பயிற்சி (வேலை பார்ப்போருக்குத் தனிப்பிரிவு). ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்; நாகலிங்கசுவாமிகள் வீதி, சங்கானை. (301)

### வகுப்புகள்

கணிதத்தில் சிறந்த பெறுபேறு அடைய வேண்டுமா? கணிதம் கற்பிப்பதில் 40 வருடங்களுக்கு மேல் அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் மிகக் குறுகிய காலத்தில் சிறந்த பெறுபேறுகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டு அடிப்படை அறிவிலிருந்து கற்பிக்கப்படும். O/L 10,9,8,7,6. இல.8, பிளர்ச்சர்ஸ் ஒழுங்கை, சுண்டுக்குளி. மாணவர் வசதிக்கேற்ப நேரம் ஒதுக்கப்படும். (123)

### தவறிவிட்டது

குப்பிழான்சந்தி, குப்பிழான் என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி இராஜேஸ்வரன் மாலினிதேவி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.716154467V), விசேட அடையாள அட்டை (இல.0906014457) ஆகிய இரண்டும் குப்பிழானில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும். (338)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுத்தம்செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (068)

பிறிமா புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தரமான புறொயிலர் கோழிகள் சுத்தம் செய்து 1/2 கிலோவில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: வை.சிவகுமார், இல.227, பிறவுண் வீதி (நரிக்குன்றுக்கு அருகில்), யாழ்ப்பாணம். குஞ்சுகள் மட்டும் இல. 461, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (348)

### விற்பனைக்கு

நல்லின Dashound நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (340)

### வீடற்றவன்

வானொலியில் 'வீம்பு' நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள்: 1.யாழ்ப்பாணமா? கொழும்பா? 2. இலக்கியக்கட்டுரைகள் 3. ஒரு காதலின்கதை 4. வீடற்றவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும். (315)


சூழல் தனைப் பேணிடுவோம் வாருங்கள் - அதில்
கோடி கோடி நன்மையுண்டு கேளுங்கள்.

(C/20534)


## யூரியாவுக்குத் தட்டுப்பாடு

யாழ்.மாவட்டத்தில் யூரியா உரத்திற்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

இதனால் பொன்னாங்கண்ணி, வல்லாரை செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை யூரியாவைக் கொழும்பில் இருந்து தருவிக்க யாழ்மாவட்ட கமநல சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரியவருகிறது.(க-185)

## நோயாளர்களுக்கு உணவுப் பொதிகள்

யாழ்ப்பாணம்,பெப்.6

இலங்கையின் 54ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வல்வெட்டித்துறைப் பொலீஸார் நேற்றுமுன்தினம் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு உணவுப் பொதிகளை வழங்கினர்.

இதேவேளை, மந்திகை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் மந்திகை ஆஸ்பத்திரிவளவு மற்றும் நோயாளர் விடுதிகள் என்பனவற்றை சுத்திகரிக்கும் பணியை மேற்கொண்டனர். (க-15)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் தற்போது இரண்டாம் வருடத்தில் கல்வி கற்கும் ஆசிரியர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பெற்றோர்களைத் தவறாது இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு பீடாதிபதி தெரிவித்துள்ளார்.(க-180)

## மாணவர்களுக்கு அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.6

வடமராட்சியில் இயங்கிவரும் 'ஊற்று' நிறுவனம் மாணவர்களின் நலன்கருதி அன்பளிப்பாக அப்பியாசப் புத்தகங்களை வழங்கியுள்ளது.

வடமராட்சியில் தஞ்சமடைந்துள்ள சுமார் ஆயிரத்து இருநூறுக்கும் அதிகமான இடம்பெயர்ந்த மாணவர்கள் இதனால் பயனடைந்துள்ளனர்.

இதேவேளை இம்மாணவர்களுக்கு 'யுனிசெவ்' நிறுவனம் இரண்டாம் கட்டமாக கல்விக்கான உபகரணப் பொருள்களை இவ்வாரத்தில் அன்பளிப்பாக வழங்கவுள்ளது. (க-15)

## பிளாஸ்ரிக் சிகிச்சைக்கு இங்குவரும் நிபுணர்களில் நால்வர் தமிழர்கள்!

யாழ்ப்பாணம்,பெப்.6

பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதற்காக யாழ்ப்பாணம் வரவுள்ள பிரிட்டிஷ் குழுவில் நால்வர் இலங்கைத் தமிழர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணரான சாள்ஸ் விவேகானந்தா, டாக்டர் எஸ்.சிவஞானம், மயக்க மருந்து வழங்கல் சத்திரசிகிச்சை நிபுணர்களான டாக்டர் இராசரட்ணம், டாக்டர் வேலாயுதபிள்ளை ஆகிய நால்வருமே அந்தக் குழுவிடம் இடம்பெற்றிருக்கின்றனர்.

எதிர்வரும் 11ஆம் திகதி யாழ்ப்பாணம் வரும் இக்குழுவினர் இரு வாரங்கள் இங்கு தங்கியிருந்து அவயவங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவற்றை சீர்செய்வதிலும் எரிகாயங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அந்த அடையாளங்களை நீக்கிச் சீர்ப்படுத்துவதிலும் ஈடுபடுவார்கள்.

இதேவேளை -

பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை செய்துகொள்வதற்காக குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்கள் தமது பெயர்களை யாழ்.ஆஸ்பத்திரியில் பதிவுசெய்துள்ளதாகப் பணிப்பாளர் தெரிவித்தார். (ம-180)

## தாதியின் சேவைக்கு பாராட்டு

தென்மராட்சி,பெப்.6

மந்திகை ஆஸ்பத்திரியில் மருத்துவ தாதியாகக் கடமையாற்றிய எம்.எஸ்.எவ். நிறுவனத்தைச் சேர்ந்த கரோலீன் என்பவர் தனது சேவைக்காலம் முடிவடைந்ததையடுத்து கடந்த முதலாம் திகதி கொழும்பு திரும்பி உள்ளார்.

இவரது சேவையைப் பாராட்டி கடந்த வியாழக்கிழமை ஆஸ்பத்திரி ஊழியர்களால் பிரியாவிடை விழா நடத்தப்பட்டது. (க-117)

## கண்ணீர்க் காணிக்கை



### நாகநாதர் ஸ்ரீபுஸ்பநாதன்

(S.L.E.A.S. II)

*(முன்னாள் அதிபர், யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை)*

எமது கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி அதன் வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்த அமரர் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

(356)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக தாதிய உத்தியோகத்தர்
**வேலாயுதம்பிள்ளை சிவானந்த**
அவர்களின் *பாசமிகு சகோதரியான*
**வேலாயுதம்பிள்ளை சாந்தினிதேவி** அவர்களும்
மற்றும்
**பெரியதாயார் நல்லதம்பி அழகம்மா** அவர்களும்

அகால மரணமடைந்ததையிட்டு நாம் வேதனையும் அதிர்ச்சியும் அடைந்தோம். இவர்களின் பிரிவால் துயருறும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆத்மா சாந்தி அடைவதாக.

*போதனா வைத்தியசாலை,*
*யாழ்ப்பாணம்.* (342) A'97 தாதியர்கள்

## மரண அறிவித்தல்கள்

### நாகநாதர் ஸ்ரீபுஸ்பநாதன் [B.A.(Cey.), SLEAS]

(முன்னாள் அதிபர், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் 'அப்பாவளவு', மல்லாகத்தை வதிவிடமாகவும் தற்போது விசுவமடுவில் வசித்து வந்தவருமாகிய நாகநாதர் ஸ்ரீபுஸ்பநாதன் 03.02.2002 ஞாயிற்றுக்கிழமை விசுவமடுவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அங்கயற்கரசி (இளைப்பாறிய ஆசிரியை, மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும் திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பையா நாகநாதர் (இளைப்பாறிய தபாலதிபர்) - புஸ்பகாந்தியம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரும் 'அப்பாவளவு', மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற நவரத்தினம் - தங்கச்சியம்மா தம்பதியினரின் சிரேஷ்ட மருமகனும் மற்றும் பாலசுப்பிரமணியம் (கொழும்பு), காலஞ்சென்றவர்களான தர்மாவதி இரத்தினசபாபதி, புனிதவதி வேலும்மயிலும் மற்றும் பத்மாவதி, பொன்னம்பலம் (கனடா), விஜயநாதன் (நியூஜேர்சி - அமெரிக்கா), சிவநாதன் (கனடா), கௌசல்யாதேவி பிரேமச்சந்திரன் (கனடா), சத்தியதேவி சண்முகநாதன் (லண்டன்), சத்தியநாதன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.02.2002 திங்கட்கிழமை விசுவமடுவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'சிவபதி'
*வன்னியசிங்கம் வீதி,*
*தாவடி வடக்கு, கொக்குவில்.* (347)

*தகவல்:*
வேலும்மயிலும் சேந்தன்

### நடராசா சிவபரன்

(நிரஞ்சனா தியேட்டர் மனேஜர்)

வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், சங்கானை தேவாலய வீதியை வதிவிடமாகவும் கொண்ட நடராசா சிவபரன் நேற்று (05-02-2002) செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு காலமாகிவிட்டார்.

அன்னார் நடராசா - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் விக்னேஸ்வரதேவியின் அன்புக் கணவரும் தாட்சாயினி, துஸ்யந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தயாபரன் (கனடா), திருபரன் (ஜேர்மனி) ஆகியோரின் உடன்பிறந்த சகோதரனும் நாகலிங்கம் இராமநாதனின் மருமகனும் இ.இராஜசிங்கத்தின் (சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்) சகலனும் கோணேஸ்வரதேவி (கனடா), நிர்மலாதேவி, ரமேஸ் (பாபு - லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2002) புதன்கிழமை மு.ப. 11.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.நடராசா (தகப்பன்),
இ.ராஜசிங்கம் (சகலன்).

*தேவாலய வீதி,*
*சங்கானை.* (354)

## முக்கிய அறிவித்தல்

**பளை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

**கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டம்**

**09.02.2002**

மேற்படி சங்கத்தின் துணைவிதி 20 : 2 இன்படி என்னால் ஆக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைய மேற்படி சங்கத்தின் பின்வரும் கிளைகளின் கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்வதற்காக இச்சங்கத்தின் கிளைகளினது பொதுச்சபைக் கூட்டங்கள் மேற்படி ஒழுங்கு விதிகளின் பந்தி 9 இற்கு அமைய கீழ்க்குறிக்கப்படும் கால அட்டவணைப்படி நடைபெறும் என்பதை எல்லா உறுப்பினர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஆகவே தயவுசெய்து கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்குச் சமுகமளிக்கத் தகுதிபெற்ற உறுப்பினர்கள் அனைவரும் அந்தந்தக் கிளைகளில் கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்குத் தவறாது சமுகமளித்து கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

*கிளைப் பொதுச்சபைக் கூட்ட ஆரம்பம்:* **2002.02.09 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி**

*இடம்:* புலோலி கிழக்கு, புலோலி, பருத்தித்துறை என்ற முகவரியில் இயங்கும் பளை மத்திய கல்லூரி கூட்ட மண்டபம்.

| தொ. இல. | கிளை இல. | கிளையின் பெயர் | | தவிசாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 01 | 225 | கிளாலி | | திரு.வி.கே.அருந்தவநாதன் (கூ.ப.) |
| 02 | 226 | முகமாலை | | திரு.பி.மோகன் (கூ.ப.) |
| 03 | 228 | வண்ணாங்கேணி | | திரு.எம்.எஸ்.சண்முகநாதன் (கூ.ப.) |
| 04 | 230 | புலோப்பளை | | திரு.இ.விஜயமோகனராஜா (கூ.ப.) |
| 05 | 229 | கிளை வண்ணாங்கேணி | | திரு.ரி.செல்வசோதி (கூ.ப.) |
| 06 | 231<br>232 | முகாவில்<br>சோரன்பற்று | இணைந்த கிளை | திரு.ஏ.நாகலிங்கம் (கூ.ப.) |
| 07 | 239<br>234 | மாமுனை<br>செம்பியன்பற்று | இணைந்த கிளை | திரு.என்.பத்மசோதி (கூ.ப.) |
| 08 | 233<br>227 | மருதங்கேணி<br>கிளை ஆழியவளை | இணைந்த கிளை | திரு.ஆர்.புவன்ராஜ் (கூ.ப.) |
| 09 | 236<br>235 | கோயில்வயல்<br>குறிஞ்சாதீவு | இணைந்த கிளை | திரு.எஸ்.திருச்செல்வம் (மா.கூ.அ.அ.) |

### முக்கிய குறிப்பு

இடம்பெயர்வு காரணமாக உறுப்பினர்களின் தற்போதைய தனிப்பட்ட முகவரியினை அறிய முடியாமையினால் ஒவ்வொரு தகைமைபெற்ற உறுப்பினருக்கும் தனித்தனி அறிவித்தல் அனுப்பி வைக்கமுடியவில்லை. ஆகவே இந்த அறிவித்தலை ஒவ்வோர் உறுப்பினர்களுக்கும் தனித்தனி வழங்கப்பட்ட அறிவித்தலாகக் கொள்ளும்படி தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன். கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான விவரமான அறிவுறுத்தல்கள் தற்போது செயற்படும் சங்கத் தலைமை அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

*கூட்டுறவு அலுவலகம்,*
*யாழ்ப்பாணம். 05-02-2002* (சி-20610)

சு.கணேசமூர்த்தி
கூ. அ. உ., ஆணையாளர்

## கைதுசெய்யப்பட்டு காணாமற்போன
# எவரும் விடுவிக்கப்படும் பட்சத்தில் பெற்றோரிடமே கையளியுங்கள்!
## பாதுகாவலர் சங்கம் நீதி அமைச்சருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,பெப்.6

வடபகுதியில் கைதுசெய்யப்பட்டு, காணாமற்போன எவராவது விடுவிக்கப்படும் பட்சத்தில் அவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவினிடம் அல்லது அவர்களின் பெற்றோரிடம் மட்டுமே கையளிக்கப்படவேண்டும். பாதுகாப்புக் கருதி தனிப்பட்ட எந்தத் தரப்பினரிடமும் அவர்களின் விடுதலைபற்றி அறிவிக்கவோ, அவர்களைக் கையளிக்கவோ வேண்டாம்.

- இவ்வாறு வடபகுதியில் கைது செய்யப்பட்டுக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம், நீதி அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சங்கத்தின் சார்பில் பொதுச் செயலாளர் எஸ்.சற்குணன் அனுப்பி வைத்துள்ள அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எந்தவித விசாரணைகளும் இன்றி நீண்ட நாள்களாகச் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளோர் தொடர்பாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தங்களுடன் கலந்துரையாடியதாக அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தன.

அதனடிப்படையில், ஏற்கனவே நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு விசாரணைகள் முடிவடைந்த பின்னரும் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளோரை முதலிலும் -

நீதிமன்ற விசாரணைகள் எதுவுமின்றி (காணாமற்போய்விட்டதாகக் கருதப்படும்), சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை அடுத்த கட்டமாகவும் -

விடுதலை செய்யுமாறு தாங்கள் சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் அறியவருகிறது.

எமது சங்கம் காணாமற்போனோர் தொடர்பான பெயர்விவரங்களை புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சரிடம் கடந்த மாதம் 14ஆம் திகதி யாழ்ப்பாணம் - நல்லூரில் வைத்துக் கையளித்துள்ளது.

இந்தப் பட்டியலில் உள்ளவர்கள் விடுவிக்கப்படும்போது அவர்களை எந்தவொரு தனிப்பட்ட கட்சியிடமும் ஒப்படைக்காது அவர்களின் பெற்றோர்களிடம் அல்லது மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகளிடம் நேரடியாகக் கையளியுங்கள்.

அவர்கள் விடுவிக்கப்படுவதற்கு முன்னர் அவர்களது பெற்றோருடன் தொடர்புகொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்தித்தாருங்கள் - இவ்வாறு அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் அநுராதபுரம மாவட்ட நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்ட நாவற்குழி தச்சன் தோப்பைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவகுமார் என்பவர் இதுவரை வீடு வந்துசேரவில்லை என்பதும் -

இது தொடர்பாக பாதுகாவலர் சங்கம், அநுராதபுரம் மாவட்ட நீதிவானுக்கு அண்மையில் கடிதம் எழுதியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (க-9)

### சந்நிதிக்கு வருகிறது கண்டாமணி!

தென்மராட்சி,பெப்.6

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு விரைவில் புதிய கண்டாமணி வரவுள்ளது.

லண்டனில் புதிய கண்டாமணி உருவாக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதால் விரைவில் ஆலயத்துக்கு வந்துசேரும் என் ஆலயப் பிரதமகுரு தெரிவித்தார்.

கடந்த 1986 ஆம் ஆண்டு உடைக்கப்பட்ட மணிக்கோபுரம் 1996 இல் நிர்மாணிக்கப்பட்டது. இப்புதிய கண்டாமணியை உருவாக்குவதற்குக் கனடா மற்றும் வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் நிதியுதவி வழங்கியுள்ளனர். (க-117)

### எழுத்துப் பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்.6

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் முதலாம் பிரிவில் சேவையாற்றிய அபிவிருத்தித் தொண்டர்களுக்கான எழுத்துமூலமான அறிமுகப்பரீட்சை எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர்ப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளதாக நல்லூர்ப் பிரதேச செயலக திட்டமிடற் பணிப்பாளர் எஸ்.இரவீந்திரசர்மா தெரிவித்துள்ளார். (க-180)

### மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.6

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் க.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதனும், சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி ஜெயராணி மனோகரி பொன்னுத்துரையும், கௌரவ விருந்தினராக ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி நவம் பேரம்பலமும் கலந்துகொள்வர். (க-10)

### உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஆங்கில நூல்கள்

யாழ்ப்பாணம்,பெப்.6

யாழ்மாவட்ட உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உள்ளூராட்சி ஆணையாளர், 640 ஆங்கில நூல்களை அனுப்பிவைக்கவுள்ளார்.

பதினாறு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் 40 புத்தகங்கள் வீதம் அனுப்பிவைக்கப்படவுள்ளன என்றும் -

இந்த நூல்கள் ஐக்கிய இராச்சியத்தினால் தேசிய நூலாக்கல், ஆவணாக்கல் சபைக்கு வழங்கப்பட்டவை என்றும் - தெரிவிக்கப்பட்டது. (க-185)

### மிருசுவில் மத்திய மருந்தகம் இனி கொடிகாமத்தில்

தென்மராட்சி,பெப்.6

மிருசுவில் மத்திய மருந்தகம் இன்று தொடக்கம் கொடிகாமம் பிரதேச சபைக் கட்டடத்தில் இயங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலையே இங்கு இயங்குமென முன்னர் அறிவிக்கப்பட்ட போதிலும் தற்போது மிருசுவில் மத்திய மருந்தகமே இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மிருசுவில் மத்திய மருந்தகக் கட்டடத்தில் தற்போது படையினரின் ஆஸ்பத்திரி இயங்குவதால் அங்கு ஆஸ்பத்திரியை இயங்கவைக்க முடியாத நிலைமை உள்ளது எனவும் அறிவிக்கப்பட்டது. (ம-117)

# 6வயதுச் சிறுமி மீது பலாத்கார முயற்சி
## திருமலையில் சிப்பாய் கைது

திருகோணமலை,பெப்.6

திருகோணமலையில் 6 வயதுச் சிறுமி ஒருவரைப் பலாத்காரத்துக்கு உட்படுத்த முயன்ற இராணுவச் சிப்பாய் ஒருவரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

உவர்மலை கோணேசபுரம் பகுதியில் சுதந்திர தினத்தன்று மாலை 4 மணியளவில் இந்தச்சம்பவம் இடம்பெற்றது.

கடைக்குப் பொருள்கள் வாங்குவதற்காகச் சென்ற சமயமே சிறுமி இந்த அவலத்துக்கு உள்ளானதாகக் கூறப்படுகின்றது.

சிகரெட் வாங்க மூன்று சிப்பாய்கள் கடைக்கு வந்தனர். அவர்களில் ஒருவர் கடையில் நின்ற சிறுவன் உள்ளே சென்ற சமயம் சிறுமியைத் தூக்கிக் கொண்டுபோய் அருகில் உள்ள கோயிலுக்குள் வைத்துப் பலாத்காரம் செய்யமுயன்றதாகவும் -

இது குறித்துக் கடைச் சிறுவன் கொடுத்த தகவலை அடுத்து அயலவர்கள் திரண்டு குறிப்பிட்ட சிப்பாயை மடக்கிப் பிடித்ததாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

அங்கிருந்த சமாதான நீதிவான் ஒருவர் உடனடியாகப் பொலீஸாருக்கு இது குறித்து அறிவித்தார். விரைந்து வந்த பொலீஸார் சிப்பாயைக் கைது செய்தனர். அதற்கிடையில் பொதுமக்களால் சிப்பாய் நையப் புடைக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. (ம)

# தேசிய இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சி வரம்பினுள் தீர்வு
## மத வைபவத்தில் பிரதமர் உரை

கொழும்பு,பெப்.6

ஒற்றையாட்சி வரம்பிற்குள்ளேயே தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும். இந்தத் தீர்வு சகல இனக்குழுக்களும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருக்கவேண்டும். இந்த இலக்கை அடைவதற்கு எனது அரசு திடசங்கற்பம்பூண்டிருக்கிறது.

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சுதந்திரதினத்தை முன்னிட்டு களனி ரஜமகா விகாரையில் நடைபெற்ற மத வைபவம் ஒன்றில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமரர் டி.எஸ்.சேனநாயக்கா போன்ற தேசியத் தலைவர்கள் நாட்டை வெளி ஆக்கிரமிப்புக்களிலிருந்து பாதுகாப்பதற்காக சிரமம் பாராது, கடுமையாக உழைத்தார்கள். ஆனால் சுதந்திரத்திற்குப் பின்னர் தற்போது இலங்கை என்றுமில்லாதவாறு மிக மோசமான சர்ச்சையைச் சந்தித்துள்ளது. அவற்றிலிருந்து நாட்டை மீட்டுத் தருவதற்காக மக்கள் எனக்கு வழங்கிய எல்லையற்ற அதிகாரத்தைப் பயன்படுத்துவதோடு மக்களது மேலான ஆணையையும் மதித்து நடப்பேன். எந்த விதத்திலும் தேசத்திற்குத் துரோகம் இழைக்கப்போவதில்லை.

வீழ்ச்சி கண்டுள்ள பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு விசேட திட்டமொன்று அமுல் செய்யப்படவேண்டும். தற்போதைய வாழ்க்கைச் செலவீனங்களிலிருந்து மக்களை மீட்டெடுப்பதற்காக அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் - என்று பிரதமர் தெரிவித்தார். (ஐ-9)

### கட்டுரைப் போட்டி; வெற்றிபெற்றோர்

யாழ்ப்பாணம்,பெப்.6

உரும்பிராய் லயன்ஸ் கழகம், லயன்ஸ் கழக ஸ்தாபகர் மெல்வின் ஜோன்ஸ் ஞாபகார்த்த தினத்தை முன்னிட்டு நடத்திய கட்டுரைப் போட்டியில் உரும்பிராய் இந்துக் கல்லூரியும், வயாவிளான் மத்திய மகாவித்தியாலயமும் வெற்றியீட்டியுள்ளன.

வெற்றியீட்டியோர் விவரம்:-

முதலாம் இடம் - கோமதி பரராசசிங்கம், உரும்பிராய் இந்துக் கல்லூரி.

இரண்டாம் இடம் - அகல்யா இராசரத்தினம், வயாவிளான் ம.ம.வி.

மூன்றாம் இடம் - பவித்ரா இராசகோபாலு, வயாவிளான் ம.ம.வி.(க-8)

### பெண்ணின் சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடினான் இளைஞ…

பட்டப்பகலில் வீதியால் தனியாகச் சென்ற வயோதிபப் பெண்ணின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அறுத்த இனந்தெரியாத இளைஞன் பாதிச்சங்கிலியுடன் ஓடித் தப்பித்துக் கொண்டான்.

பருத்தித்துறை வல்லிபுரப் பரிகாரியார் ஒழுங்கையில் அண்மையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் தும்பளை வடலிப்பாய்ப் பகுதியைச் சேர்ந்த வயோதிபப் பெண்ணே சங்கிலியைப் பறிகொடுத்தார்.

அந்த ஒழுங்கையால் சென்று கொண்டிருந்தவேளை, பின்னால் சைககிளில் வந்த இளைஞனே மக்கள் நடமாட்டம் இல்லாத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சங்கிலியை எட்டிப் பிடித்து அறுத்துக்கொண்டு சைக்கிளில் ஓடிமறைந்துவிட்டான் என்று அந்தப் பெண் தெரிவித்தார்.

அந்த இளைஞன் நீளக் காற்சட்டை அணிந்து 'ரிப்ரொப்'பாகக் காணப்பட்டான் என்றும் அவர் சொன்னார். (க-15)

## வாசகர் திருமுகம்

### மருத்துவ பீட அனுமதி எண்ணிக்கை அதிகரிக்குமா?

2001ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பெறுபேறுகள் வந்துவிட்டன. மாணவர்களும் பெற்றோர்களும் வெட்டுப்புள்ளியைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் இருந்து ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

யாழ்.மருத்துவ பீடச்சபை வருடமொன்றுக்கு 120 மாணவர்களை அனுமதிக்க சிபார்சு செய்துள்ளது. ஆனால் ஆணைக்குழு இநத வருடம் 100 மாணவர்களை மட்டும் அனுமதிக்கவுள்ளது. சபை 120ஐ சிபார்சு செய்தும் கடந்தவருடங்களில் 60, 70, 80 மிகவும் அரிதாக 90 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் கொழும்பு, பேராதனை, றுஹுணு, காலி, களனி, ஜெயவர்த்தனபுர - கோட்டை மருத்துவபீடங்களில், அங்கு எவ்வளவு கூடமாணவர்களை அனுமதிக்க முடியுமோ அந்தளவு மாணவர்களை வருடந்தோறும் அனுமதிக்கிறார்கள்.

இதற்குத் தமிழ் மாணவர்களின் உயர்தரப் பெறுபேறுகள் காணாதென்று காரணம்கூறப்படுகிறது. ஆனால் இம்மாணவர்கள் கடந்த கால்நூற்றாண்டுகளாக இந்த மாவட்டங்களில் நடைபெறும் போர், அரசியல் ஸ்திரமற்ற நிலையினால் பாதிக்கப்பட்டும் ஆயிரக்கணக்கில் இறப்புக்களைச் சந்தித்தும், அவர்களது உற்றார் காயப்பட்டும், இடம்பெயர்ந்து திரிந்து வீடுவாசல்களை இழந்தும், சேதமுற்று பொருள்களை இழந்தும் பல கஷ்டங்களுக்கு உள்ளானார்கள். மின்சாரவசதி தென் மாவட்டங்களில் உள்ளதுபோல் இங்கில்லை. இதனால் மாணவர்கள் மனநிலைபாதிக்கப்பட்டு அவர்களின் பெறுபேறுகள் குறையக் காரணமாகிறது. இதனைக் கருத்திற்கொண்டு ஆணைக்குழு யாழ்ப்பாண மாவட்டத்தைக் கஷ்டப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தி உள்ளது வரவேற்கத்தக்கது.

மேலும் வடக்கு - கிழக்கு மாவட்டங்களில் வைத்தியர்களுக்குப் பெரும் பற்றாக்குறை பல வருடங்களாக நிலவுகிறது. மேற்கூறிய காரணங்களைக் கவனமாகக் கருத்திற்கொண்டு அதிபர்கள், கல்வித்திணைக்கள அதிகாரிகள், யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடசபை, மருத்துவ பீடாதிபதி, துணைவேந்தர், மூதவை, பேரவை, அரசியல் தலைவர்கள் இதனை அலசி ஆராய்ந்து யாழ்.மருத்துவ பீடத்திற்கு ஆகக்கூடியது 120 மாணவர்களை வருடந்தோறும் அனுமதிக்க உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா?

இப்படி அனுமதித்தால் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த சிறுதொகை மாணவர்களையும் யாழ்.மருத்துவ பீடத்திற்கு அனுமதிக்க வேண்டிவரும் என்று கூறப்படுகிறது. சமாதானத்தைப் பற்றி பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இத்தருணத்தில், மேற்படி அனுமதி, சமாதானத்தை மேலும் வலுவடையச் செய்யாதா? அத்துடன் அவர்கள் அப்படி யாழ்ப்பாணத்திற்கு அனுமதிக்கப்பட்டாலும் செல்வாக்கைப் பாவித்து வேறு தென் மருத்துவ பீடங்களுக்கு அனுமதியைப் பெற்றுச்செல்லக்கூடும்.

பொருத்தமான முடிவை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறோம்.

**பாதிக்கப்பட்ட மாணவர்களும், பெற்றோர்களும்.**

### ஆசிரிய சேவைக்கு உள்வாங்குவதில் வலயங்கள் இடையே முரண்பாடு ஏன்?

அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய பயிலுநர் மற்றும் தகுதிகாண ஆசிரியர்களை ஆசிரிய சேவையினுள் உள்வாங்குவது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றை வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விஅமைச்சு அண்மையில் வெளியிட்டிருந்தது. இதுதொடர்பான செய்திகள் 'உதயன்' பத்திரிகையிலும் வெளியாகியிருந்தன.

எனினும் தொண்டர் ஆசிரியர்களாகவிருந்து ஜி.சீ.ஈ. உயர்தரத் தகுதியுடன், 2000ஆம் ஆண்டு தகுதிகாண் ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்களை இச்சுற்றறிக்கைக்கு அமைய ஆசிரிய சேவையினுள் உள்வாங்குவதா? இல்லையா? என்பது குறித்து வலயத்திற்கு வலயம் குழப்பநிலை காணப்படுவதாகத் தெரியவருகின்றது.

இச்சுற்றறிக்கைக்கு அமைய, சில கல்வி வலயங்கள் தொண்டர் ஆசிரியர்களாகவிருந்து 2000ஆம் ஆண்டு தகுதிகாண் ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்களுக்கும் படிவங்களை வழங்கி அவர்களையும் உள்வாங்க நடவடிக்கை எடுத்துள்ளன.

ஆனால் வேறுசில வலயங்களோ தொண்டர் ஆசிரியர்களாகவிருந்து தகுதிகாண் ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்களை இச்சுற்றுநிருபத்திற்கமைய உள்வாங்கமுடியாது எனக் குறிப்பிட்டு, அவர்களுக்குப் படிவங்களை வழங்க மறுத்துவருகின்றன.

மாகாணக் கல்வி அமைச்சினால் அனுப்பப்பட்ட இச்சுற்றறிக்கையை விளங்கிக்கொள்வது தொடர்பாக வலயத்திற்கு வலயம் அதிகாரிகள் மட்டத்தில் குழப்பநிலை காணப்படுவதையே இது காட்டுகின்றது என நாங்கள் எண்ணுகின்றோம்.


இச்சுற்றறிக்கைக்குத் திருத்தம் ஒன்று பின்னர் வெளியிடப்பட்டது என்று கூறப்படுகின்றபோதிலும், அது தொடர்பான உண்மை நிலையை அறியமுடியாதுள்ளது.

எனவே, தொண்டராசியராகவிருந்து தகுதிகாண் ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்கள் இச்சுற்றறிக்கைக்கு அமைய உள்வாங்கப்படுவார்களா? இல்லையா? அல்லது உள்வாங்கப்படுவார்கள் என்றால் குழம்பிப்போயுள்ள வலயங்களுக்குத் தகுந்த அறிவுறுத்தல்களைக் கொடுத்து, தகுதிகாண் ஆசிரியர்கள் அனைவருக்கும் உள்வாங்கல் படிவங்களை வழங்குவதற்கும், உள்வாங்கப்படமாட்டார்கள் என்றால் மாகாணக் கல்வி அமைச்சுடன் தொடர்புகொண்டு அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய இத்தகைய ஆசிரியர்களையும் உள்வாங்குவதற்கான அறிவுறுத்தல்களைப்பெற்றுத் தகுந்த நடவடிக்கையைக் காலந்தாழ்த்தாது எடுப்பதற்கும் மாகாணக் கல்வி பணிமனையும், ஆசிரியர் தொழிற் சங்கங்களும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென 'உதயன்' மூலம் பணிவன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

*யாழ்ப்பாணம்.* **பாதிக்கப்பட்ட தகுதிகாண் ஆசிரியர்கள்.**

# இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

06-02-2002




## செல்வன் திபாகரன் நிதர்சன்

**திரு. திருமதி திபாகரன் - மங்கையர்க்கரசி** தம்பதிகளின் செல்வப் புதல்வன் நிதர்சன் தனது இரண்டாவது பிறந்த நாளை இன்று (2002.02.06) புதன்கிழமை லண்டனிலுள்ள தனது இல்லத்தில் அப்பா, அம்மாவுடன் மிகச்சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை அம்மப்பா அம்மம்மா, ரஞ்சினிச்சித்தி, அப்பப்பா, அப்பம்மா, ரதி மாமி, வதனி மாமி குடும்பம், சிவாஜினி மாமி குடும்பம், மகேஸ்வரி குடும்பம், இராஜதுரை குடும்பம், சிறீ குடும்பம், முல்லைத்தீவிலுள்ள யசோ மாமி, கண்ணா மாமி, கொழும்பிலுள்ள சந்திரகுமார் குடும்பம், குணம் மாமா குடும்பம், லண்டனிலுள்ள தவமணிதேவி, மனோ, ஜெயா குடும்பம், சுவிஸிலுள்ள கிருபா மாமி குடும்பம், நோர்வேயிலுள்ள பாட்டி, சின்ன அம்மப்பா குடும்பம், கனடாவிலுள்ள குட்டி அம்மப்பா குடும்பம் மற்றும் உறவினர் எமது நண்பர்கள் அனைவரும் அம்மன் அருளுடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டுகாலம் நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றனர்.

ந.குணசீலன்
குடும்பத்தினர்.

*வீ.மு.தெரு, பருத்தித்துறை.* (C-20603)

# முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15 - 06 - 1965

மறைவு 06 - 02 - 2001

## திருமதி கருணாகரன் கலைச்செல்வி

(செல்வி)

பாசத்தின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் - விளங்கிய
எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
நேசமுடன் எமையெலாம் வளர்த்த அன்புத் தெய்வமே!
ஆசையுடன் உங்களைப் பேணிப் பாதுகாத்தோம்
காலன் அவன் பொறுக்காமல் உயிர் கவர்ந்தானோ?
செல்வி அம்மா! ஓராண்டு என்ன நூறு
ஆண்டுகள் சென்றாலும் உங்கள் பசுமை நினைவு
எங்கள் நெஞ்சைவிட்டு நீங்காதம்மா!

ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

*பிரிவால் துயருறும்:*
கணவர், பிள்ளைகள், அம்மா, அப்பா, மாமா, மாமி, சகோதரர்கள், உற்றார், உறவினர்கள.

*வங்கியடி, இணுவில் கிழக்கு, இணுவில்.* (328)

# துயர் பகிர்கின்றோம்

கர்த்தருக்குள் மகிமையடைந்த

## நல்லையா ஜே.விஜயரட்ணம்

**அவர்களின் பிரிவால் துயருறும் வடபிராந்திய வை.எம்.சி.ஏகளின் தலைவர் திரு.வி.மித்திரரஞ்சன அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.**

வடபிராந்திய
வை.எம்.சி.ஏகளின்
அங்கத்தவர்கள

*உடுவில், சுன்னாகம்.* (250)

## நீர்வேலிப் பகுதியில் வீதி புனரமைப்பு பணியில் படையினர்!

பருத்தித்துறை,பெப்.6

நீர்வேலிப் பகுதியில் இராணுவத்தினர் வீதி புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டனர்.

அண்மையில் பெய்த மழையின் காரணமாக நீர்வேலிக் கந்தசுவாமி கோயிலுக்கு அருகிலும் சந்திக்குச் சமீபமாகவும் மிகுந்த சேதத்திற்குள்ளாகியிருந்த வீதிப் பகுதிகளே சிவில அதிகாரியின் மேற்பார்வையில் திருத்தம் செய்யப்பட்டன.

இராணுவ உழவு இயந்திரத்தில் உருளை பூட்டப்பட்டு வீதி செப்பனிடும் பணிகள் இடம்பெற்றன.

(க-118)

## சனசமூக நிலையம் புனரமைப்பு

சுன்னாகம்,பெப்.6

சுன்னாகம் தெற்கு காந்திரூபன் சனசமூக நிலையம் 3 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

புனரமைக்கப்பட்ட கட்டடத்தை அண்மையில் வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர் க.கமலசேகரன் திறந்துவைத்தார். (க-27)

## வளலாய்ச் சந்திவரை பஸ்சேவையை நீடிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.6

யாழ்ப்பாணத்தில் இருந்து இராச வீதி ஊடாக இடைக் காட்டுச்சந்தி வரை சேவையில் ஈடுபட்டுவரும், வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்ஸை வளலாய்ச்சந்தி வரைக்கும் நீடிக்குமாறு வளலாய்ப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த சில வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்திலிருந்து வளலாய் வரையுமே இந்தச் சேவை இடம்பெற்றது. எனினும் இடம்பெயர்வுகளின பின்னர் அப்பகுதியில் மீண்டும் மக்கள் குடியேறியதை அடுத்து இச்சேவை ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இந்தச் சேவை இடைக்காட்டுச் சந்தி வரை மட்டுமே நடத்தப்பட்டது. இதனால் வளலாய்ப் பகுதி மக்கள் பயணத்தை மேற்கொள்வதில் பெருஞ்சிரமங்களை அனுபவிக்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது.

முன்னரைப் போன்று வளலாய் எல்லைப்புறம் வரை இல்லாவிட்டாலும், வளலாய்ச் சந்திவரையாவது இச்சேவையை நீடித்து, வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஆவன செய்ய வேண்டுமென்று அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (க-15)

## தவறிவிட்டது

சங்கானை. நிற்சாமத்தைச் சேர்ந்த **யோன் சுயந்தன் என்பவருடைய** தே.அ.அ. (இல.840192059V). விசேட அ.அ. என்பன வலிகாமம் மேற்குப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத் தவர்கள் **சங்கானை பிரி உணைவகத்தில** ஒப்படைத்துதவவும்.

(336)

ஞானப்பிரகாசம் - கிறேஸ்

# பொன் மணவிழா

**06.02.2002**



## திரு.திருமதி சூசைப்பிள்ளை ஞானப்பிரகாசம் கிறேஸ்

தம்பதியினர் திருமணம் செய்து 50 ஆண்டுகள் நிறைவெய்திவிட்டன.
தமது பொன் மணவிழாவினை ஆஸ்திரேலியாவில்
தம்முடைய பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள் சூழக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

தகவல்: பேராசிரியர் டாக்டர் எஸ்.ஜெயசீலன்,
*சிங்கப்பூர்.*

(337)

**மீசாலை கிழக்கு காட்டுவளவு நெல்லியடி கந்தசுவாமி கோயில்**

## பிராயச்சித்த அபிஷேகம் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம்

**மேற்படி கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 10.02.2002 காலை 10 மணிக்கு கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் உபயகாரர்களும், அடியார்களும் தவறாது சமுகமளிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.**

தலைவர். (346) செயலாளர்.

# கண்ணீர் அஞ்சலி

எமது உடுவில் வை.எம்.சி.ஏயின் தலைவர்
திரு.வி.மித்திரரஞ்சன்
அவர்களின் அன்புத் தகப்பனார்

## நல்லையா ஜே.விஜயரட்ணம்

அவர்கள் 04.02.2002 அன்று மரணமடைந்தமையையிட்டு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம.

உடுவில் வை.எம்.சி.ஏ.
அங்கத்தவர்கள்.

(349)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் சுபமங்களகரமான விஷ வருடம் தைத்திங்கள் 25ஆம் திகதி வியாழக்கிழமை நாளை(07.02.2002) முற்பகல் 11.36 மணிமுதல் 12.45 மணிவரையுள்ள இடப இலக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**லிங்கேஸ்வரன்**
(லிங்கன்)
அவர்களுக்கும்



எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**சுபாஜினி**
(சுபா)
அவர்களுக்கும்

இறைவன் திருவருளால் நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய நெல்லைக்குமரன் திருமண மண்டபத்தில் நடைபெறும் திருமண வைபவத்தில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சமேதரராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்துச் சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்பு உபசாரம் மணமகன் இல்லத்தில் 09-02-2002 சனிக்கிழமை பி.ப.2.30 மணி (ப.ரே.) முதல் நடைபெறும்.

**தாங்கள் நல்வரவை விரும்பும்:**

**திரு.திருமதி**
**அ.துரைராஜசிங்கம் (இராசதுரை) குடும்பம்**
**ஈஸ்வரி நகைத் தொழிலகம்,**
**16/8, சீனியர் லேன், கலட்டி,**
**வண்ணை, யாழ்.** (284)

**திரு.திருமதி ச.நடராசா குடும்பம்**
*உரிமையாளர்:* **ராஜன்.ஆபரண மாளிகை,**
**கண்டி வீதி, சாவகச்சேரி.**
*தற்காலிக முகவரி:*
**வதிரி வீதி, உடுப்பிட்டி.**

(இருவீட்டார் அழைப்பு)

## ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்
### துன்னாலை வடக்கு, புலோலி

எமது ஆலயத்தில் திருமணம் செய்துகொள்ளவிரும்புவோர் ஆலயத்தின் அனுமதியைப் பெற்ற பின்னரே திருமணம் சார்பான பத்திரிகை விளம்பரங்களோ அன்றி அழைப்பிதழ்களோ வெளியிடும் வண்ணம் பக்தர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். இதன்மூலம் பின்னர் ஏற்படும் சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளலாமென்பதையும் மாயவன் பக்தகோடிகளுக்கு அறியத்தருகின்றோம். ஞாயிறு, விசேட தினங்களையும் தவிர்த்துக்கொள்வது நல்லது.

*அறங்காவற் சபை*
ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்.
துன்னாலை வடக்கு. பருத்தித்துறை.

(362)

# ஐக்கிய தேசியக் கட்சி
## உள்ளூராட்சித் தேர்தல் பற்றிய அறிவித்தல்

யாழ்.மாவட்டத்தில் உள்ள 16 உள்ளூராட்சிச் சபைகளுக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மூன்று பிரதேச சபைகளுக்கும் வேட்பாளர்களை நிறுத்த ஐ.தே.கட்சி முடிவுசெய்துள்ளது.

வேட்பாளர் தேர்வில் 08.02.62இற்குப் பின்னும் 31.05.82இற்கு முன்னும் பிறந்த இளம் வயதினருக்கு 40 சதவீதமும். 08.02.62இற்கு முன் பிறந்தவர்களுக்கு 60 சதவீதமும் முன்னுரிமை வழங்கப்படவிருக்கின்றது.

1. யாழ்ப்பாணம் மாநகரசபை
2. வல்வெட்டித்துறை நகரசபை
3. பருத்தித்துறை நகரசபை
4. சாவகச்சேரி நகரசபை
5. ஊர்காவற்றுறை பிரதேச சபை
6. நெடுந்தீவு பிரதேச சபை
7. வேலணை பிரதேச சபை
8. வலிகாமம் மேற்குப் பிரதேச சபை
9. வலிகாமம் வடக்கு பிரதேச சபை
10. வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை
11. வலிகாமம் தெற்கு பிரதேச சபை
12. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
13. வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை
14. பருத்தித்துறை பிரதேச சபை
15. சாவகச்சேரி பிரதேச சபை
16. நல்லூர் பிரதேச சபை

ஒவ்வொரு பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே அந்தப் பிரதேசத்தின் நிர்வாகத்தை நடத்த வாய்ப்பளிக்க வேண்டும் என்ற பிரதமரும்,ஐ.தே.கட்சித் தலைவருமான கௌரவ ரணில் விக்கிரமசிங்கவின் விருப்பத்திற்கு அமைவாக -

குடாநாட்டில் ஒவ்வொரு பிரதேசத்திலும் பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகள், கல்விமான்கள், ஆலய முகாமையாளர்கள், இளைஞர்கள் ஆகியோர் இடம்பெறத்தக்கவகையில் வேட்பாளர் பட்டியல்களை தயாரிக்கும்படி பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. இந்த விவரங்களுடன் வேட்பாளர் பட்டியலை இன்று என்னிடம் நேரடியாகக் கையளித்து, அது தொடர்பாக கலந்துரையாடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

வேட்பாளர் பட்டியல்கள் நாளை மாவட்டத் தேர்தல் ஆணையாளரிடம் கையளிக்கப்படவிருக்கின்றன.

தொடர்புகளுக்கு:-

தி.மகேஸ்வரன (M.P.)
இந்து கலாசார அமைச்சர்,
*212, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*
தொலைபேசி இல.:- 2025, 3542.

(C/20622)

☆குறிப்பு:-
இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அந்தந்த பிரதேச நிர்வாகத்தை, அபிவிருத்தியை அந்தப் பிரதேச மக்களே மேற்கொள்ளுமாறு கோருகின்றோம்.

# மரண அறிவித்தல்கள்

## அம்பலவாணர்
## சௌந்தரிப்பிள்ளை சரஸ்வதிப்பிள்ளை

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் சௌந்தரிப்பிள்ளை சரஸ்வதிப்பிள்ளை நேற்று செவ்வாய்க்கிழமை (05.02.2002) காலமானார்.

அன்னார் கந்தப்பிள்ளை சண்முகத்தின் மனைவியும் லோகநாயகி, லோகேஸ்வரி, லோகநாதன் (கனடா), லோகாம்பிகை (கனடா) ஆகியோரின் தாயாரும் ஓய்வுபெற்ற ஆசிரியர் அம்பலவாணர் தில்லைநாதனின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2002) புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் சிறுப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தெகிவளை,*
*கொழும்பு,*
(C/20619)
தகவல்:
தில்லைநாதன் (சகோதரன்)
(ஆவரங்கால்)

## V.S.மணியம்

தெடுத்தனை கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த **V.S.**மணியம் 05.02.2002 செவ்வாய்க்கிழமை (நேற்று) காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சோனப்பு மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தெடுத்தனை (யாக்கரு)*
*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.*
(C/20623)
தகவல்:
சு.சிவராசா (மகன்)

## கப்பல் பயணிகளுக்கு!

யாழ்ப்பாணம்,பெப்.6

'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலில் நேற்று செவ்வாய்க்கிழமை பயணம் செய்யப் பயணச்சீட்டு பெற்றுள்ள பயணிகளை நாளை வியாழக்கிழமை பயண ஏற்பாடுகளுடன் வருகை தருமாறு யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் கேட்டுள்ளது. (ஒ)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.6

தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா முதலாம் வருடப் பரீட்சை எதிர்வரும் 23ஆம், 24ஆம் திகதிகளில் நடைபெறமாட்டாது என்றும்-

இந்தப் பரீட்சைகள் அடுத்த மாதமே இடம்பெறும் என்றும் -

யாழ்.இந்துக் கல்லூரி நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-3)

## தொழில் நுட்ப மாணவரும் ஆதரவு

யாழ்ப்பாணம்,பெப்.6

மீனவரின் போராட்டத்துக்கு ஆதரவாக நாளை வியாழக்கிழமை நடத்தப்படவிருக்கும் கதவடைப்புப் போராட்டத்துக்கு யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம் முழு ஆதரவு தெரிவிதத்துள் ளது.

கடற்றொழிலாளர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள போராட்டத்துக்கு தேவை ஏற்படின் தோள் கொடுக்கத் தயாராக இருப்பதாக மாணவர் ஒன்றியம் நேற்று விடுத்த ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அபிவிருத்தி தொண்டருக்கான கலந்துரையாடல்

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த முதலாம்பிரிவு அபிவிருத்தித் தொண்டர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை காலை 10மணிக்கு மானிப்பாய் நிலையத்தில் இடம்பெறும்.

இந்தக் கலந்துரையடலில் ஆசிரியர்கள், பரிசோதகர்கள், மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அபிவிருத்திப் பரிசோதகர் கேட்டுள்ளார். (ஒ-100)

## சாவகச்சேரி இந்து பெப்.18 முதல் இயங்கும்

சாவகச்சேரி இந்துக் கல்லூரி எதிர்வரும் 18ஆம் திகதிமுதல் மீண்டும் சொந்த இடத்தில் இயங்க உள்ளதாக கல்லூரியின் அதிபர் ஆர். கைலைநாதன் அறிவித்துள்ளார்.

கல்லூரி மீண்டும் பழைய இடத்தில் இயங்குவதற்கான முன் ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கல்லூரியின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரை எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் காலை 9மணிக்கு கல்லூரியில் சமூகமளிக்கும்படி அதிபர் கேட்டுள்ளார். (ஐ-3)


**தேவை**
அரைக்கும் ஆலை
வேலையில் அனுபவம்
உள்ளவர் தேவை.
தொடர்பு: No.18, றக்கா றோட்,
யாழ்ப்பாணம். (366)

**லஷ்சுமி** இணுவில்
இன்று முதல்
(ரீக்ஸ்)
(மூச்சைத் திணறடிக்கும் பாம்பின் வேகம்)
காட்சிகள் : 10.30, 2.30, 4.45, 6.30
பாடசாலைகளுக்கு விசேட அனுமதி
வழங்கப்படும்

**ராஜா** யாழ்ப்பாணம்
கமலஹாசன், சிம்ரன்,
ஸ்நேகா, அப்பாஸ்
நடிப்பில்
**பம்மல் K சம்பந்தம்**
தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு: 10.30, 2, 5 (பு.நே.)
08.02.2002 முதல்
(C/20571)

**நாகம்ஸ்** சுன்னாகம்
விஜய், பூமிகா, மோனல்,
விவேக், வடிவேலு நடிக்க
**பத்ரி**
காட்சிகள் 11.00, 3.00 (புதியநேரம்)
(357)


## யாழ்.மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம்
## யாழ்.குடாநாட்டு வர்த்தக சங்கங்களுக்கான அன்பான வேண்டுகோள்!

**மீனவர்களின் போராட்டம் நீதியானது என்பதனால் அவர்கள் மேற்கொள்ளும் போராட்டத்திற்கு ஆதரவாக நாளை 07.02.2002 வியாழக்கிழமை குடாநாட்டு சகல வர்த்தகர்களும் கடைகளைப் பூட்டி ஹர்த்தால் அனுஷ்டிப்பதற்கு ஆதரவுவழங்கும் வண்ணம் சகல வர்த்தகர் சங்கங்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

*165,மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(சி20615)
யாழ்.மாவட்ட வர்த்தகர் சங்கங்களின்
சம்மேளனம்

# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம் நடராசா

மல்லாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் நடராசா நேற்று (05-02-2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் விக்கினேஸ்வரியின் அன்புக் கணவரும் ஆனந்தகுமார் (ஆசிரியர், மல்லாகம் ம.வி.), ஆனந்தகௌரி, ஆனந்தராசா, ஆனந்தரூபி, ஆனந்தவினோதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி தயாகௌரியின் (யா/அருணோதயக் கல்லூரி ஆசிரியை) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (06-02-2002) புதன்கிழமை பி.ப. ஒரு மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீலியம்பனை,*
*மல்லாகம்.*
(364)
தகவல்:
நா.ஆனந்தகுமார். (மகன்)

## திருமதி சுப்பிரமணியம் நல்லம்மா

மிருசுவில் வடக்கை பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் நல்லம்மா இந்தியாவில் நேற்று (05.02.2002) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வினாசித்தம்பி (கிளாலித்தம்பு) - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் ஞானகலாவல்லி (கலா - இந்தியா), சுபகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ச.தங்கராசாவின் (லண்டன்) அன்பு மாமியாரும் தனோஜா, தஜீப், சிந்துசன், தாட்சாயினி ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (05.02.2002) செவ்வாய்க்கிழமை இந்தியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மிருசுவில் வடக்கு,**
**மிருசுவில்.**
(368)
தகவல்:
வி.சிவானந்தம் (ரத்தினம்)
வி.விவேகானந்தம் (ராசா)
(சகோதரர்கள்)

## கந்தையா சிவஞானம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவஞானம் நேற்று (05-02-2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சுந்தரம் தம்பதியினரின் அன்பு மகனும் யோகம்மாவின் அன்புக் கணவரும் பிறேமாவதி, விஜயகாந்தன் (ஜேர்மனி), வசந்தி, தயாநிதி (ஆசிரியை, நீர்வேலி தமிழ்க் கலவன் பாடசாலை), சிவானந்தன் (ஜேர்மனி), சிவநேசன், சிவசுப்பிரமணியம் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராசா, மகேஸ்வரன் (சர்மிலன் ஸ்ரோர்ஸ், ஊரெழு), சிவநாதன் (சிவா தொலைத்தொடர்பு நிலையம், நீர்வேலி, புத்தூர்), ரஞ்சினி (ஜேர்மனி), செல்வமதி, சியாமினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிறேமராஜ், மதனராஜ், தாரணி, விஜிந்தன், நிவேதா, நிஷானி, தசிந்தா, சர்மிலன், தரணிகா, யதுகுலன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06-02-2002) புதன்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி இந்து மயனத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.*
(369)
தகவல்:
செ.மதனராஜ் (பேரன்)

## திருமதி சிவசம்பு அருளம்மா

இணுவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி சிவசம்பு அருளம்மா நேற்று (05.02.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்புவின் அன்பு மனைவியும், சிவலோகநாயகி, சண்முகநாதன், வரதராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் கண்ணுத்துரை, நிர்மலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் லக்ஷயன், கம்சலா, அழகிவின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2002) புதன்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***சிவகாமி அம்மன் கோயிலடி,***
***இணுவில் கிழக்கு,***
***இணுவில்.***
(370)
தகவல்:
சி.சண்முகநாதன்
(மகன்)

## தர்மலிங்கம் சின்னப்பு

நல்லூரைச் சேர்ந்த தர்மலிங்கம் சின்னப்பு நேற்று (05.02.2002), செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்புக் கணவரும் இராமலிங்கம், யோகலிங்கம் (கனடா), கனகலிங்கம் (இந்தியா), துரைசிங்கம், துரைராசா (கொழும்பு), பாலசிங்கம், ஜெயராஜா (யாழ்.போதனா வைத்தியசாலை), கமலாதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகம்மா, சகுந்தலாதேவி, கனகமலர், காஞ்சனாதேவி (கோண்டாவில் அரசினர் வைத்தியசாலை), சகுந்தலாதேவி, புஸ்பமலர் கனகசபை (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2002) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***81/10, சங்கிலியன் வீதி,***
***நல்லூர், யாழ்ப்பாணம்.***
(371)
தகவல்:
சி.பாலசிங்கம்
(மகன்)

# இலங்கைக்கு நிதிஉதவி வழங்க சர்வதேச நாணய நிதியம் உறுதி

கொழும்பு,பெப்.6

இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்புத் திட்டத்துக்கு நிதியுதவி வழங்க சர்வதேச நாணய நிதியம் இணக்கம் தெரிவித்துள்ளது.

பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட வாஷிங்டனில் சமர்ப்பித்த பொருளாதார மறுசீரமைப்புத் திட்டத்துக்கே சர்வதேச நாணய நிதியம் உதவி வழங்குவதாக உறுதியளித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் வறுமைக் குறைப்பு வளர்ச்சி நிதியத்தின்கீழ் இந்த நிதி உதவியை சர்வதேச நாணய நிதியம் வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்தத் திட்டததுக்கு நிதியுதவி வழங்க வேண்டுமாயின் இலங்கை அரசின் வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகை குறைக்கப்படவேண்டும் என்ற நிபந்தனையை சர்வதேச நாணய நிதியம் விதித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (ஐ-6)

# படகு விபத்துக் குறித்து தொடர்ந்து விசாரணை

## 15 பேரைக் காணவில்லை

கொழும்பு,பெப்.6

இத்தாலிக்கு சட்டவிரோத குடியேறிகளை ஏற்றிச்சென்ற மீன்பிடிப் படகு ஒன்று மாத்தறை தெவிநுவர கடலில் விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பாக பொலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த சனி இரவு இடம்பெற்ற விபத்தில் சம்பந்தப்பட்ட படகின் உரிமையாளர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

இந்த விபத்தில் ஐந்து பேர் நீரில மூழ்கி உயிரிழந்துள்ளனர்; 80 பேர் மீட்கப்பட்டுள்ளனர். மேலும் 15 பேரை இதுவரை காணவில்லை.

காணாமற்போனோர் கடலில் நீந்தித் தப்பிச் சென்றிருக்கலாம் அல்லது நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என்றும் -

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும பொலீஸார் தெரிவித்தனர்.

இதேவேளை -

காலியில் இருந்து இத்தாலிக்கு சட்டவிரோதமாக குடியேற்றக்காரர்களை ஏற்றிச்சென்ற படகு ஒன்றை இலங்கைக் கடற்படையினர் நேற்றுக கைப்பற்றியுள்ளனர்.

இந்தப் படகில் 50 சட்டவிரோத குடியேற்ற வாசிகள் பயணம் செய்ததாகவும் -

அவர்களையும் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் கைது செய்துள்ளதாகவும் -

இவர்கள் ஒவ்வொருவரும் இத்தாலிக்கு செல்வதற்காக தரகர்களிடம் தலா 2 லட்சம் ரூபாவை செலுத்தியதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. (ஐ-6)

# வடக்கு - கிழக்கு மக்களின் உரிமைகளில் கவனம் செலுத்துக!

## புலிகளுக்கு ஜனாதிபதி ஆலோசனை

கொழும்பு,பெப்.6

மோதல் தவிர்ப்பு நடைமுறையில் உள்ள வேளையில் வடக்கு - கிழக்கு மக்களின் உரிமைகளில் கவனம் செலுத்துவது விடுதலைப் புலிகளின் கடமையாகும்.

- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகளைப் பாதுகாக்கும் விதத்திலான தீர்வே சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தர சமாதானத்தை எட்டுவதற்கான ஒரே வழி என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அரசுத் தரப்புடன் யுத்தநிறுத்தம் மேற்கொள்ளும் இந்த வேளையிலும் சிறுவர்களை இராணுவத்தில் இணைப்பது கவலைதரும் விடயமாகும். 1988 ஆம் ஆண்டு சிறுவர்களை இராணுவத்தில் சேர்ப்பதில்லை என்று யுனிசெப் அமைப்புக்கு அளித்த உறுதிமொழியை மதித்து நடக்கப் புலிகள் முன்வரவேண்டும் என்றும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

நிரந்தர சமாதானத்துக்கு சகல தரப்பினரும் பரந்த மனத்துடன் செயற்படவேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார். (ஐ-3)

### மறியற்போரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரைவில் நல்லமுடிவு எடுக்கப்படும்.

இந்நிலையில் அவசரப்பட்டு மேற்கொள்ளப்படும் மறியற்போராட்டம் எமது முயற்சிகளைச் சீர்குலைத்துவிடும். எனவே போராட்டத்தைக் கைவிட்டு சமாதான சூழ்நிலை உருவாக மக்கள் ஆதரவு வழங்க வேண்டும் - என்று அவர் தெரிவித்துள்ளார்.

### அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை -

சமாதானப் பேச்சுக்கான முயற்சிகள் இடம்பெற்றுவரும் இவ் வேளையில் வடக்கு - கிழக்கில் தேர்தல் நடத்தப்படுவதை விடுதலைப் புலிகள் விரும்பவில்லை என்று புலிகளுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகியபின் அதன் முன்னேற்றத்தைப் பொறுத்து வடக்கு - கிழக்கின் உள்ளூர் நிர்வாகம் தங்களிடம் ஒப்படைக்கப்படுவதையே புலிகள் விரும்புவதாகவும் தெரியவந்தது.

### போர்நிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவினரிடம் முன்வைத்தார் என்றும் -

அந்த செய்தி ஏஜென்ஸி மேலும் தெரிவித்தது.

நாளை கொழும்பு வரும் நோர்வேக்குழு இலங்கை அரசுப பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியபின் உடன்படிக்கை இறுதி செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-6-9)

### தேர்தலை ஒத்திவைப்பதற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் அடிப்படையில்தான் தேர்தலை நடத்த முடியும். புதிதாக நியமனப் பத்திரம் கோரி புதிய தேர்தலை நடத்த முடியாது.

தற்போதைய உள்ளூராட்சித் தேர்தலை வடக்கு - கிழக்கில் ஒத்திவைக்கும்படி தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பு ஏற்கனவே விடுத்த வேண்டுகோளை கொள்கையளவில் ஏற்றுக்கொண்ட அரசு, அதை நிறைவேற்றுவதில் உள்ள சட்டச் சிக்கலை கடந்த வார இறுதியில்தான் உணர்ந்து கொண்டதாகக் கூறப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் விசேட சட்டமூலம் ஒன்றை அவசர அவசரமாகக் கொண்டுவருவதன்மூலம், ஏற்கனவே பிரகடனப்படுத்தப்பட்டுவிட்ட உள்ளூராட்சித் தேர்தல்களை வடக்கு - கிழக்கில ஒத்திவைக்கலாம் என்ற ஒரு யோசனை அரசின்முன் வைக்கப்பட்டது.

ஆனால் அவசரச்சட்டமூலம் ஒன்றை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதாயின் அதற்கு ஜனாதிபதியின் ஒப்புதல் தேவை. தற்போதைய நிலையில் ஜனாதிபதி அதற்கு ஒத்துழைப்பாரா என்பதில் சந்தேகம் நிலவுவதால் அரசு அந்த யோசனையைக் கைவிட்டுவிட்டது.

அதன் பின்னர்தான் மாற்று ஏற்பாடுகள் குறித்து தமிழ்க்கட்சிக் கூட்டமைப்புடனும் முஸ்லிம் காங்கிரஸுடனும் கலந்தாலோசனை நடத்தி அரசு முடிவுகளை எடுத்திருக்கின்றது.

ஏதேனும் ஓர் உள்ளூராட்சி சபைக்கான தேர்தலுக்கு ஒரே ஒரு கட்சி அல்லது சுயேச்சைக்குழு மட்டும் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் என்றால் அந்த சபைக்கான தேர்தல் நடத்தப்படாமல், நியமனப் பத்திரம் தாக்கல் செய்வது பூர்த்தியானதும் அந்த ஒரே ஒரு குழு அல்லது கட்சியின் வேட்பாளர்கள் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும் என்பது தெரிந்ததே.

இந்த நிலையைத் தவிர்ப்பதற்காக வடக்கு - கிழக்கில் சகல சபைகளுக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர் பட்டியல்கள் தாக்கல் செய்யப்படுவதை உறுதிப்படுத்துவது என்று ஆளும்கட்சியும் தமிழ்க்கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஒன்றுகூடி முடிவெடுத்துள்ளன.

இதன்படி -

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஆளும் ஐ.தே.கட்சியும் கிழக்கில் முஸ்லிம்களின் பிரதேசங்களில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட வேட்பாளர்பட்டியல்களை சுயேச்சைக் குழுக்களாகத் தாக்கல் செய்யும். அதேபோல வடக்கு - கிழக்கில் ஏனைய பிரதேசங்களில் உள்ள உள்ளூராட்சி சபைகள் ஒவ்வொன்றுக்கும் ஒன்றுக்கும் மேற்பட்ட வேட்பாளர் பட்டியல்களை சுயேச்சைக் குழுக்களாக தமிழ் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் தாக்கல் செய்யும். இதன் மூலம் ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) அல்லது வேறு சுயேச்சைக்குழு தனித்து வடக்கு கிழக்கில் ஏதேனுமொரு உள்ளூராட்சி சபைக்கு ஒரேயொரு வேட்பாளர் பட்டியலை மட்டும் தாக்கல் செய்து அதன்மூலம் போட்டி இன்றித் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்பு முறியடிக்கபடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுயேச்சைக்குக் குழுவாக போட்டியிடுவதற்கு கட்டுப் பணம் செலுத்த நாளையே கடைசி நாளாகும்; வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கும் நாளை மறுதினம் வரையே அவகாசம் உண்டு.

அதேசமயம் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் ஒரு வேட்பாளர் பட்டியலில் குறைந்தது 35 வீதமானோர் இளைஞர்களாக இருக்க வேண்டும் என்று சட்டம் கூறுகின்றது. இல்லையேல் அந்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுவிடும்.

எனவே நாளைக்குமுன் கட்டுப் பணம் செலுத்தி, நாளை மறுதினத்துக்கு முன்னர் இளைஞர்களைக் கணிசமாகக்கொண்ட சுயேச்சை வேட்பாளர் பட்டியல்களைத் தயாரித்து தாக்கல் செய்வதற்காக தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் பிரமுகர்கள் இன்று கொழும்பில் இருந்து வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கு விரைகின்றனர்.

வேட்புமனுத் தாக்கல் முடிந்ததும் தற்போதைய ஏற்பாடுகளின்படி தேர்தல் நடக்கும் தினம் இரண்டொரு மாதங்களுக்கு ஒத்திவைக்கப்படும். அதன் பின்னர் வடக்கு - கிழக்கில் தற்போது பிரகடனப்படுத்தப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களையும் அத்தேர்தல்களில் போட்டியிடுவதற்காக தாக்கல் செய்யப்பட்டிருக்கும் நியமனப்பத்திரங்களையும் செல்லுபடியற்றதாக்கி, பிறிதொரு காலத்தில் புதிதாக தேர்தல்களைப் பிரகடனப்படுத்தி நடத்துவதற்கு வழிசெய்யும் சட்டம் ஒன்று நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும்.

அவசரச்சட்டமூலமாக இல்லாமல் சாதாரண சட்டமூலமாக அது சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என்பதால் அதற்கு ஜனாதிபதியின் ஒப்புதல் அவசியமற்றதாகின்றது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைக் கொண்டுள்ள ஐக்கிய தேசிய முன்னணி அரசு, தமிழ்கட்சிக் கூட்டமைப்பின் உதவியுடன் இந்த சட்டமூலத்தை காலக்கிரமத்தில் நிறைவேற்றி தற்போதைய உள்ளூராட்சி தேர்தலை வடக்கு - கிழக்கில் நடத்தாமல் தள்ளிப் போடும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-6)

### செயலகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேர் வன்செயல் காரணமாகக் கொல்லப்பட்டு விட்டதாக 'நான்' அமைப்பினால் வழங்கப்பட்ட கடிதங்கள் தொடர்பான முழு விவரங்களையும-

காணாமற்போன மேலும் 90 பேரின் பெயர்பட்டியல்களையும் உயிருடன் இருப்பதாகக் கூறப்படும் 90 பேர் எந்தச் சிறைகளில் அல்லது முகாமகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்ற விவரங்களையும் உடனடியாகத் தெரியப்படுத்துமாறு பாதுகாவலர் சங்கத்தினர் அண்மையில் யாழ்ப்பாணம் வருகைதந்த அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனாவிடம் கேட்டிருந்தனர். அடுத்த 14 தினங்களுக்குள் அவற்றைத் தெரியப்படுத்துவதாக அமைச்சர் உறுதியளித்திருந்தார். ஆனால் அதற்கு இதுவரை அவரிடமிருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. இதனையடுத்தே மேற்படி விவரங்களைச் சமர்ப்பிக்க மேலும் கால அவகாசம் வழங்க பாதுகாவலர் சங்கம் அமைச்சருக்குக் கடிதம் அனுப்பியிருக்கிறது. (ஐ-6-9)

### இந்தியாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றோர்களிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று நீதிவானிடம் கோரினர்.

மூவரில் ஒருவரின் பெற்றோர் இந்தியாவில் இருப்பதாகவும் -

ஏனைய இருவரின் பெற்றோர்கள் குடாநாட்டில் வசிப்பதாகவும் -

பொலீஸார் தெரிவித்தனர்.

மூவரையும் அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்ட நீதிவான், எதிர்வரும் 19 ஆம் திகதி வரை இவர்களை நீதிமன்றக் காவலில் வைக்கும்படி உத்தரவிட்டார். (ஐ-3-10)

### இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றம் குறித்தும் இந்தியத் தூதருக்கு வெஸ்போர்க் விளக்கிக் கூறியுள்ளார்.

சமாதான முயற்சிகளுக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவு வழங்கும் என்றும் -

இந்தியாவின் இந்த நிலைப்பாட்டில் மாற்றங்கள் எதுவும் இல்லை என்றும் -

இருதரப்பும் அறிவித்துள்ள போர் ஓய்வு சமாதான முயற்சிகளுக்கான ஒரு சாதகமான கட்டம் என்றும் இந்தியத் தூதர் தெரிவித்தார். (ஐ-6-9)


**உடனடி வேலைவாய்ப்பு**

**பயிற்சிப் பத்திரிகையாளர்கள்**

கொழும்பில் இயங்கும் 'சுடர்ஒளி' பத்திரிகை நிறுவனத்தில் *அலுவலகச் செய்தியாளர்கள், உதவி ஆசிரியர்கள்* பதவிகளில் பணியாற்றுவதற்காகப் பயிற்சிப் பத்திரிகையாளர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் ஆரம்பப் பயிற்சி அளிக்கப்படும். பின்னர் கொழும்பில் கடமையாற்ற வசதி செய்யப்படும்.

பத்திரிகைத்துறையில் நாட்டமுள்ள *பட்டதாரிகள் மட்டும்* விண்ணப்பிக்கலாம்.

சுயமாகப் பூர்த்திசெய்த விண்ணப்பப்படிவத்துடன், எழுத்துப் பரீட்சைக்குத் தயாராக *இன்று பி.ப. 4.30 மணிக்கு நேரில்* வரவும்.

பரீட்சை நடைபெறும் இடம்:
உதயன் - சஞ்சீவி பணிமனை,
*361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/20621)



**விற்பனையாளர் தேவை**

எமது ஸ்தாபனத்துக்கு விற்பனையாளர்கள் தேவை. புடைவை வியாபாரத்தில் முன் அனுபவம் உள்ளவர்கள் (விரும்பத்தக்கது). பழக விரும்புவோர் 10மணி, 1மணி - 4மணி, 6மணி வேலை நேரத்தில் நேரில்வரவும்.

**த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**
42, 44, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

(353)



O/L பரீட்சை எடுக்கும்
[தரம் 11] மாணவர்களுக்கான

**SPECIAL TRAINING COURSE**
*(ENGLISH)*

*விண்ணப்ப முடிவு திகதி - 20. 02. 2002*

☆ 2000ஆம் ஆண்டு எமது நிறுவனத்தில் பயிற்சிபெற்ற 75 வீதத்தினர் "D"சித்தியையும், 20வீதத்தினர் "C" சித்தியையும், 5%வீதத்தினர் "S"ஐயும் பெற்று அனைவரும் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

**OXFORD ENGLISH ACADEMY**
P.K.Lane, Point Pedro

பயிற்சியின் போது -

(1) மாதம் இரு பரீட்சைகள்
(2) ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.
(3) புள்ளிகள், பெற்றோருக்கு அனுப்பப்படும்.

குறிப்பு:- நேர் முகப் பரீட்சை மூலமே மாணவர் தெரிவு இடம்பெறும்.

(விண்ணப்பப்படிவத்தினை அலுவலகத்தில் பெறவும்)

(352)



**A/L 2003**

கணக்கீடு
BALAVASAN
B.B.A. (f.m.Spl)

☆ சொத்து விற்பனை ☆
*Mon., Fri. - 4.00-5.00p.m.*
ஆரம்பம்:8.2.02 - 4p.m. - FRI

**BECON யாழ்.**

(341)



**SPECIAL ENGLISH CLASSES**

*புதிய பிரிவுகள் ஆரம்பம்:*
*07-02.2002 Thu.- 3.00 p.m. (S.L.T.)*

**BY: MR.B.SASITHARAN**

*NOTE: இலக்கு வழியில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படுகிறது.*

*UNIVAC*
*K.K.S.Road (Naachimaar Kovilady), Jaffna.*
***NEW HARY'S INSTITUTE***
*Vaddukoddai East, Sithankerny.*

(318)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.02.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.